காவியத்துள் ஒரு வீர காவியம்

சத்தியாக்கிரக வீரமுரசு

பி.ஸ்ரீ

21

இந்திரஜித்தின் பேச்சிலே ராஜ பக்தி முரசுபோல் முழங்குகிறது. இன்றைய தேச பக்தர்களுக்கும் விளங்கக் கூடிய, இவர்களையும் வசீகரிக்கத் தக்க நிலையில் தன் கொள்கையை வெளியிட்டான்.

இந்திரஜித்தின் தேசநேச ராஜ விசுவாசக் கொள்கையில் இனப்பற்று, சாதிப்பற்று, தந்தை மீது பற்று முதலியனவும் அடங்கி யிருக்கின்றன. இக் கொள்கை தவிர வேறு சமயக் கொள்கைகளிலோ பக்தி மதக் கொள்கைகளிலோ, நம்பிக்கை கொள்ளாதவன் இந்திரஜித்து.

தன் கொள்கையை நிலை நிறுத்த உயிர்த் தியாகம் உள்ளிட்ட எத்தகைய தியாகங்களையும் செய்யச் சித்தமா யிருக்கிறான்; எத்தகைய மாயங்களையும் கொடுமைகளையும் புரிவதற்கும் கூசிப் பின் வாங்க மாட்டான்.

இப்பேர்ப்பட்ட அரக்க வீரனுக்கு, தம்பி செத்ததும் பெரிதாகத் தோன்றாமல்,

எம்பியோ தேய்ந்தான்?
எந்தை புகழ் அன்றோ
தேய்ந்தது?

[எம்பி — என் தம்பி, எந்தை — என் தந்தை.]

என்று கர்ஜித்த ராஜபக்த வீரசிங்கத்திற்கு, விபீஷணன் கோழையாகவும் ராஜத் துரோகியாகவும் தேசத் துரோகியாகவும் தோன்றியதில் வியப்பில்லை. இன்றும் விபீஷணனைத் தேசத் துரோகி யென்று தூற்றுகிறவர்கள் இல்லையா?

ஆம்; இன்றும், இந்தக் காந்தி யுகத்திலும் 'தர்ம வீரம் தான் வீரம்; சத்திய வீரம்தான் வீரம்!' என்ற கொள்கை மறக்கப்படுகிறது. இந்திரஜித்தைப் போல் இக் கொள்கையை மறுக்கத் துணிவோர் உலகிலும் நாட்டிலும் காணப் படுகிறார்கள்.

விபீஷணன் புன்னகை

இந்திரஜித்தின் வார்த்தையைப் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்தான் விபீஷணன்; கோபம் இல்லாமலே கேட்டுக் கொண்டிருந்தான்.

இந்திரஜித்து பேசி முடிந்ததும் எரிமலை நெருப்பைக் கக்கிச் சற்று ஓய்ந்து நிற்பது போல் காணப் படுகிறான். விபீஷணனோ குளிர் மழை பெய்த பச்சை மாமலை போலக் காணப் படுகிறான். தலையை அசைத்துக் கொண்டு புன்னகை புரிவதைப் பாருங்கள்:

அவ்வுரை அலமயக்
கேட்ட வீடணன்
அலங்கல் மௌலி
செவ்விதில் துளக்கித்
தன்பால் முறுவலும்
தெரிவ தாக்கி,

[அலங்கல் மௌலி—மாலை அணிந்த தன் முடியை. செவ்விதில் துளக்கி—செவ்வையாக அசைத்துக்கொண்டு, தன்பால்—தன்னிடம். முறுவல்—புன்னகை.] என்று விபீஷணன் பேசத் தொடங்கும் தோரணையை நமக்கும் தெரியச் செய்கிறான் கவிஞன்.

ராஜபக்தியா, தர்ம பக்தியா?

ஆரம்பத்தில் தொகுத்துக் கூறிப் பிறகு வகுத்துக் கூறும் ஒரு முறையைக்

கம்பனிடம் காணலாம். அந்த முறையை இந்தச் சந்தர்ப்பத்தில் பயன் படுத்திக் கொண்டு,

'வெவ்விது பாவம்;
சாலத் தருமமே
விழுமி(து) ஐய!

இவ்வுரை
கேட்டி'
என்று,

இனையன
விளம்ப
லுற்றான்

[வெவ்விது— கொடியது. சால— மிகவும். விழுமிது— சிறந்தது. கேட்டி — கேட்பாயாக. என்று—என்று. இனையன — இவ் வார்த்தைகளை. விளம்பலுற்றான் — சொல்லத் தொடங்கினான்.]

என்ற பீடிகையுடன், ஐந்து கவிகளில் ஒரு தொடராகவிபீஷணன் கொள்கையை இவன் வாக்காகவே அமைத்துக் காட்டுகிறான் கவிஞன்.



'ராஜபக்தி' பேசிய இந்திரஜித்தை நோக்கி, 'தர்ம பக்தியே சிறந்தது' என்று சொல்லப்போகிறான் விபீஷணன். பாவம் ராஜபக்தியாக வெளிப்படலாம்; தேச பக்தியாகவும் வெளிப்படலாம். சாதிச் செருக்காகவும் வெளிப்படலாம்; இனப்பற்றாகவும் தன்னை வெளியிட்டுக் கொள்ளலாம். இது விபீஷணன் கருத்து.

ராஜபக்தியோ, தேச பக்தியோ, பொது ஜன பக்தியோ, தெய்வ பக்தியோ எத்தகைய பக்திக்கும் அறம் துணையாக வேண்டும்; வலிமையே உரிமையென்ற போக்கில் செல்லும் மறம் துணையாவதில்லை. அது பழிக்கே வழி. 'அந்த வழியில் நான் செல்ல மாட்டேன்' என்கிறான் விபீஷணன்.

பழியோடு வாழ்வதும் ஒரு வாழ்வாகுமா? 'நான் பழியொடும் வாழ மாட்டேன்' என்று சொல்லிவிட்டு, இந்திரஜித்தின் ராஜபக்திக் கொள்கைக்கு எதிராகத் தன்னுடைய இதய பக்தி இன்னதென்று அந்த இதயத்தை அப்படியே திறந்து காட்டுகிறான்!

பொய்ம்மைத் துறந்தேன்?

நீ துரோகி; நாட்டைத்துறந்தாய்; அரசனைத் துறந்தாய்; அண்ணனைத் துறந்தாய்; ராட்சஸ இனத்தைத் துறந்தாய்; வீரம் துறந்தாய்; மானம் துறந்தாய்...' என்றெல்லாம் ஏசிய மைந்தனை நோக்கி, 'துறந்திலேன் மெய்ம்மை' என்று தன் கொள்கையை வெளியிடத் தொடங்குகிறான் விபீஷணன்.

'கோடி கோடி வஞ்சமும் பொய்யும் வல்லாய்!' என்று அனுமனால் அழைக்கப்பெற்ற இந்திரஜித்துக்கு விபீஷணனின் மெய்ம்மை புரிவதெப்படி? விபீஷணனே மிகவும் தெளிவாகப் பேசுகிறான்;

துறந்திலேன் மெய்ம்மை;
எய்தும் பொய்ம்மையே
துறப்ப தல்லால்;

பிறந்திலேன் இலங்கை



வேந்தன் பின்,
அவன்
பிழைத்த
போதே!

[பிழைத்த போதே—சீதையைக் கவர்ந்ததாகிய பெரும் பிழை செய்த போதே.]

'நீரைத் துறவாத மீனைப் போன்றவர்கள் ராட்சஸ ராஜபக்தர்கள்!' என்று மார் தட்டியவனை நோக்கி விபீஷணன் 'நான் அண்ணனைத் துறந்தேன், அரசனைத் துறந்தேன் என்பது உண்மை தான்; ஆனால் நான் உண்மையைத் துறக்கவில்லையே; பொய்ம்மை வடிவில் எவர் வந்தாலும் துறக்க வேண்டியது தானே முறை?' என்று பதில் சொல்லுகிறான்.

'ராவணன் எனக்கு அரசனும் இல்லை; அண்ணனும் இல்லை' என்கிறான்.

பிறந்திலேன் இலங்கை
வேந்தன் பின்!

என்று கூறுவதைக் கருத்தூன்றிக் கேளுங்கள்.

'இலங்கை வேந்தன் எனக்கு வேந்தன் அல்லன்; அவன் எனக்கு அண்ணனும்

இல்லை; நான் தம்பியும் இல்லை!' என்கிறான். பிழைகளுக்கெல்லாம் சிகரமாகப் பிராட்டியைச் சிறைப்படுத்திய போதே பாசபந்தம் முற்றும் அறுந்து போய் விட்டது என்பது விபீஷணன் மனநிலை.

சத்தியாக்கிரக வாழ்க்கை

அப்படிச் சத்தியாக்கிரக நிலையில் இருப்பவன் பொய் பேசாதது போல் மதுபானமும் செய்வதில்லையாம். சத்தியாக்கிரக உள்ளத்தை மதுபானம் முதலான பழக்கங்கள் பலவீனப்படுத்தும் என்பது குறிப்பு.

'எங்கள் திக்விஜயங்களில் உனக்குப் பங்கு இல்லை' என்ற குறிப்புடனும் இந்திரஜித்து உரையாடினான். அதற்கு விடையாக விபீஷணன், வலிமையே உரிமை என்ற கருத்தை மறுத்து 'வலியால் ஒன்றும் கொண்டிலன்' (வலிமையால் ஒன்றையும் நான் கவர்ந்து கொண்டதில்லை) என்கிறான்.

'வலிமையின் முக்கிய அம்சம் அறிவுத்திறன்' என்று ஆங்கிலத்தில் கூறுவதுண்டு. இந்த அறிவுத் திறனைக் கூர்மையாக்கிக் கூர்மையாக்கி வஞ்சனைகளும் மாயங்களும் செய்து வெற்றி பெறப் பார்ப்பவன் இந்திரஜித்து. இந்தத் திறமையையும் ஒரு திறமையாக விபீஷணன் மதிக்க வில்லை. மாயத்தையும் வஞ்சனையையும் செய்ததில்லை என்பதன்றி மனத்தினால் தான் எண்ணியதுமில்லை என்கிறான் விபீஷணன்.

இப்படி யெல்லாம் பேசி வரும் விபீஷணனை ஒரு கிறிஸ்து மூர்த்தியைப் போல் நமது அகக் கண்ணுக்கு இலக்காக்கி விடுகிறான் கவிஞன்:

உண்டிலன் நறவம்;
  பொய்ம்மை உரைத்திலன்;
  வலியால் ஒன்றும்
கொண்டிலன்; மாய
  வஞ்சம் குறித்திலன்;
  யாரும் குற்றம்
கண்டிலர் என்பால்;
  உண்டே ? நீயிரும்
  காண்டி ரன்றே ?

[நறவம்—மது; கள், குறித்திலன்—மனத்தால் சிந்தித்ததுமில்லை. என்பால்—என்னிடம். உண்டே—உண்டோ. நீயிரும் — நீங்களும், காண்டிரன்றே—காண்கிறீர்களல்லவா.]

இந்திரஜித்தைப் போன்ற எதிரிக்கும் தன் இதயத்தைத் திறந்து காட்டி, 'குறை இருந்தால் கண்டு பிடித்துச் சொல்லு!' என்று அறை கூவும் விபீஷணனைப் பாருங்கள்.

தீங்களுக்கே வீரப்புகழ் உரிய தென்று இந்திரஜித்து. பழியொடு பொருந்திய வாழ்வு என்றும் கூசாமல் குறிப்பிட்டான் விபீஷணனுடைய வாழ்வை.

'ஹிம்ஸை நெறியிலே செல்லும் உங்களுக்கே புகழும் நல்ல கதியும் உண்டாகட்டும்!' என்று மேலும் முழங்குகிறது சத்தியமுரசு :

செம்மையில் பொருந்தி
  மேலோர் ஒழுக்கினோ(டு)
  அறத்தைத் தேறும்
எம்மையே பழியும்
  பூண; நரகமும்
  எமக்கே ஆக!

[ஒழுக்கு—ஒழுக்கம், தேறும்—தெளிந்த.]

அறம் அன்பு என்று கொட்டுகிறது, நெஞ்சை அறுப்பது போலிருக்கிறது இந்திரஜித்துக்கு.

மெய்ம்மை வாழ்க என்று கொட்டுகிறது; பொய்ம்மை விழ்க என்று கொட்டுகிறது. இந்திரஜித்தையோ இவை ஆயிரம் கொள்ளித் தேள்கள் போலக் கொட்டுகின்றன.

கோபத்தோடு பேசினான், ஏசினான் இந்திரஜித்து. விபீஷணனோ அமைதியாக இளநகை அரும்பிப் பேசுகிறான்.

'என் வில்லும் கையுமே எனக்குத் துணை' என்றான் இந்திரஜித்து. விபீஷணனோ 'அறமே துணை; மறம் துணையாக வாழத் தெரியாது' என்கிறான்.

'ராஜபக்தியே என் மதம்' என்றான் இந்திரஜித்து. 'மெய்ம்மையே மதம்' என்கிறது சத்தியாக்கிரக முரசு.

'இலங்கை வேந்தன் பின் பிறந்து துரோகம் செய்கிறாயே' என்று ஏசினான் இந்திரஜித்து. 'பிறந்திலேன் இலங்கை வேந்தன் பின்!' என்று அந்த உறவுகளை மறுக்கிறது முரசு.

எல்லாவற்றுக்கும் மேலாக, 'நீ தான் என்பால் குற்றம் காட்ட முடியுமா?' என்று அறை கூவுகிறது முரசு. விடை அறியாது விழிக்கிறான் இந்திரஜித்து.

அன்று முழங்கிய விபீஷண முரசு தான் அண்மையில் காந்தியடிகள் வாயிலாக, உலகம் வியக்க, தருமம் தலை தூக்க, முழங்கியது. எத்தனை இந்திரஜித்துகள் வெற்றிச் சங்கு ஊதிப் பார்த்தாலும் சத்தியாக்கிரக முரசின் முழக்கத்தை அடக்கி விடுமா ?

[illegible] ஒரு வீரகாவியம்

பாய்ந்தானா, பயந்தானா?

பிரீ

22

'**து**ரோகம் புகழோ, பழியோ?' என்று கேட்டான் இந்திரஜித்து. 'இதுவோ சிறப்பு?' என்று ஏசினுன் பெருஞ் சீற்றத்துடன்.

விபீஷணன் தன் சத்தியாக்கிரக தர்மத்தைச் சற்று விவரமாக எடுத்துக் கூறி, முடிவுரையும் கூறி விட்டான்;

'புறத்தினில புகழே
ஆக; பழியோடும்
புணர்க; போதச்
சிறப்(பு) இனிப் பெறுக;
தீர்க' என்றனன்
சீற்றம் தீர்ந்தான்.

[புறத்தினில் — வெளியே; புறவுலலே. புணர்க — சேர்க. போதச் சிறப்பு — மிகவும் சிறப்பை.]

எமனுக்கும் எமன்

இது கேட்ட இந்திரஜித்து இடிபோலக் கர்ஜிக்கிறுன். 'நீ பெறக் கருதுகின்ற சிறப்பெல்லாம் என் கையிலுள்ள இந்த அஸ்திரத்தால் அழிந்து போகும் சிறப்பே தான்!' என்று சொல்லிக் கொண்டே ஒரு கணையைத் தேர்ந்தெடுத்து விபீஷணன் கழுத்தை நோக்கிக் குறி வைத்துச் செலுத்தி விடுகிறுன்.

'தொலைந்தான் விபீஷணன்; தொலைந்தே போனுன்!' என்று திகிலடைந்த தேவர்கள் தங்கள் கண் முன்னே அதே கணை துண்டு துண்டாக விழுவதையும் பார்க்கிறுர்கள்.

எவ்வளவு மனவுறுதியுடன் குறி பார்த்து எய்தான்! அந்தக் கழுத்து வெட்டப்படாமல் தன் கணையே லட்சுமண பாணத்தால் வெட்டுப்பட்டு விழுந்தது கண்டும் இந்திரஜித்து கொஞ்சமும் கலங்கவில்லை, எமனுக்கும் எமனுக ஜொலிக்கிறுன் அந்த வீராவேசத்திலும் கோபாவேசத்திலும்.

கூற்றுக்கும் கூற்றம்
அன்னுன்

[அன்னுன் — போன்றவன்; ஒப்பவன்.]

என்று சுட்டிக் காட்டி, அவன் கையில் எடுத்து வீசும் வேலாயுதம் ஒன்றையும்,

வேல்ஒன்று வாங்கி
விட்டான், வெயில்ஒன்று
விழுவ(து) என்ன

என்று அந்த வேல் விபீஷணன் கழுத்தை நோக்கி வருவதையும் காட்டுகிறுன் கவிஞன். இந்த வேற்படையையும் அழித்து விடுகிறது லட்சுமணனுடைய வில் — தொழில்,

அழுந்த தேரில் ஆலோசனை

அஸ்திரமும் வேலும் மட்டுமா அழிந்து போயின?—தன்னுடைய தேரும் அழிவதைக் காண்கிறுன் இந்திரஜித்து; கலங்காது காண்கிறுன்.

அழிந்த தேர்மீது நின்று கொண்டே விபீஷணன்மீது அம்புமழை பொழிகிறுன்,—'எப்படியாவது இன்று பழி தீர்த்துக் கொள்வேன்; சித்தப்பாவைக் கொன்ற பழியோடு தான் இந்த இடத்தை விட்டுப் போவேன்!' என்ற மனவுறுதியுடன்.

'இந்த மனவுறுதியைப் பாழாக்குகிறுனே தன் வில்லைக்கொண்டு!' என்ற கோபத்துடன் லட்சுமணனுடைய புயங்கள்மீதும் அம்புகளைப் பொழிகிறுன் இந்திரஜித்து.

அனுமன் முதலானவர்கள் விபீஷணனுக்குத் துணையாக வரக்கூடுமே யென்று அவர்களுடைய மார்பின் மேலும் அம்புகளைப் பொழிகிறுன்.

இந்த அம்புமழைகளால் இரத்த வெள்ளம் ஓடக் கண்டு ஆரவாரிக்கிறுன். இந்த ஆரவாரத்தில் 'உலகமே நிலை கெட்டு ஓடுகிறதோ!'' என்று தோன்றுகிறதாம்;

இத்தகைய இந்திரஜித்தின்-வீரத்தைக் காட்டும் கம்பசித்திரத்தைப் பாருங்கள்;

அழிந்ததேர் மீது
நின்றுன் ஆயிர
கோடி அம்பு

பொழிந்(து)அவன் தோளின்
மேலும், இலக்குவன்
புயத்தின் மேலும்,

ஒழிந்தவர் உரத்தின்
மேலும், உதிரநீர்
வாரி யாக


அழிந்(து) இரிந்(து) ஓட
நோக்கி, அண்டமும்
இரிய ஆர்த்தான்.

நின்றான் — நின்றவனான இந்திர ஜித்து. உரத்தின் மேலும் — மார்பின் மேலும். உதிரநீர் வாரி — இரத்த நீர்க் கடல். இரிய — நிலைகெட்டு ஓடுவது போலத் தோன்ற. ஆர்த்தான் — ஆரவாரம் செய்தான்.]

இந்திரஜித்தின் கையும் வில்லும் குரலும் இப்படி எதிரிகளைப் பயமுறுத்திக் கொண்டிருக்கும் போதே. உள்ளுக்குள்ளே 'இனி என் செய்வது?' என்ற ஆலோசனை நடைபெறுகின்றது. 'அடுத்தபடியாக என்ன செய்யலாம்?' என்பது தான் இந்த ஆலோசனையின் முக்கிய அம்சம்.

விபீஷணனையும் கொல்ல விடவில்லை எதிரிகள். 'நான் போரைத் தொடர்ந்து நடத்தவும் வழியில்லாதபடி என் தேரையும் அழித்து விட்டார்களே' என்று நினைக்கிறான் இந்திரஜித்து.

'இனி அழிவில்லாத ஒரு தேரைக் கொண்டால் அல்



அழிந்த தேர் காணப் படுகிறது. எய்த அம்புகள் விபீஷணன் தோளிலும் லட்சுமணனின் புயத்திலும் அனுமன் முதலானவர்கள் மார்பிலும் காணப் படுகின்றன. ஓடும் இரத்தம் இன்னும் உறைந்து போகவில்லை.

அவன் ஆரவாரித்த ஆரவாரம் இன்னும் செவிகளில் ஒலித்துக் கொண்டு தானிருக்கிறது, ஆனால் அவன் எங்கே?

பார்த்தவர்கள் கண்களை இமைக்க மூடிய



வாமல் நான் இந்தப் போர்த் தொழிலைத் தொடர்ந்து செய்ய முடியாது' என்பதுதான் அழிந்த தேர்மீது நிற்பவன் செய்து முடிக்கும் ஆலோசனை.

இந்திரஜித்து எங்கே?

ஆலோசனை ஒரு கணத்தில் முடிந்து விடுகிறது. அதே கணத்தில், அடுத்த கணத்தில் அல்ல — இந்திரஜித்தை அந்தத் தேர் மீது காணவில்லை.

இந்திரஜித்தின் போர்த் தொழிலை வியந்து பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் லட்சுமணர் முதலானவர்கள். பார்த்த கண்கள் இமைப்பதற்கு முன்பே அந்த வெளியில் இந்திரஜித்தைக் காணவில்லை.

தும் நழுவி விட்டான் என்பது கூட இல்லையாம். அதிசயமாகப் பார்த்தவர்கள் வழக்கம் போல் இமைக்காமலே பார்த்துக் கொண்டிருக்கிறார்களாம். அப்படியானால் அவன் செய்ததென்ன என்பதைப் பார்க்கவில்லையா?

அந்த வான வெளியிலே பாய்ந்தது போல் ஒரு தோற்றம். இது தான் எதிரிகள் கண்டது. 'ஏன் பாய்ந்தான்? எங்கே பாய்ந்தான்! எப்படிப் பாய்ந்தான்? வானத்திற்குள்ளேயே பாய்ந்து விட்டானா?' என்பதெல்லாம் விவகாரம்—வாதமும் எதிர் வாதமுமாகிய விவகாரம்.

இந்த வார்த்தை நிற்கிறது; வாதம் நடை பெறுகிறது; ஆனால் அழிந்த தேர் மீது நின்ற பேர்வழியைக் காணவில்லை. எவ்வளவு படுவேகத்தில் இந்

திரஜித்தின் ஆலோசனை நிறைவேறியிருக்கிறது.

மறைந்த இந்திரஜித்தின் இந்த மாய வேகத்தை வெளியிடும் கவிச் சித்திரம் இது;

ஆர்த்தவன் அனைய
போதின், 'அழிவிலாத்
தேர்கொண்(டு) அன்றிப்
போர்த்தொழில் புரிய
லாகா(து)' என்பதோர்
பொருளை உன்னிப்,
பார்த்தவர் 'இமையா
முன்னம் விசும்பிடைப்
பாய்ந்தான்' என்னும்
வார்த்தையை நிறுத்திப்
போனான்.........

[அனைய போதின்—அப்போது. தேர் கொண்டன்றி—தேர் கொண்டால் அல்லாமல். பொருளை உன்னி—விஷயத்தைக் கருதி. விசும்பிடை — வானத்திலே.]

'அழிவில்லாத தேர் கொண்டு வர வேண்டும்; கொண்டு வந்து போரைத் தொடர்ந்து நடத்த வேண்டும்' என்பது இந்திரஜித்தின் தீர்மானம். ஆனால் இதை அறியாத லட்சுமணன் முதலானவர்கள் வாதப் பிரதிவாதங்களில் ஈடுபடுகிறார்கள்.

'அந்த வானவெளிக்குள்ளே ஒளித்துக் கொண்டானா? அப்படித்தான் இருக்க வேண்டும், என்று ஒருவர் சொல்ல, 'அந்த வாதத்தை நான் ஒப்புக் கொள்ள முடியாது' என்கிறார் வேறொருவர்.

இப்போது செய்து கொண்டிருந்த போர்த் தொழிலைப் பார்த்தால் 'பாய்ந்தவன் பயந்தவன் இல்லை' என்றே தோன்றுகிறதாம். 'புலி பதுங்கிப் பின் வாங்குவது பாய்ந்து கொல்லத் தான்' என்பது சிலர் வாதம்.

இப்படியெல்லாம் வாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது,

விண்ணிடைக் கரந்தான்
என்பார், வஞ்சனை
விளைக்கும் என்பார்,
கண்ணிடைக் கலக்கம்
நோக்கி ஐயுற
உழக்கும் காலை,

[விண்ணிடை—வானத்தின் இடத்தே, கரந்தான்—ஒளித்துக் கொண்டான். கண்ணிடை — கண்களில். கலக்கம் நோக்கி—கலக்கத்தை ஒருவர் கண்ணில் ஒருவர் பார்த்துக்கொண்டு. ஐயுற உழக்குங் காலை — ஐயமுற்று வருந்திக் கொண்டிருக்கும்போது.]

நேர்ந்த தென்ன?

இந்திரஜித்து அழியாத தேர் இருக்கும் இடத்திற்குப் போய்விட்டானா? ராவணன் இருக்கும் இடத்திற்குத் தான் நேரே போய்ச் சேர்கிறான் என்பது கவிக் கூற்று:

பார்த்தவர் இமையா
முன்னம் விசும்பிடைப்
பாய்ந்தான் என்னும்
வார்த்தையை நிறுத்திப்
போனான் இராவணன்
மருங்கு சென்றான்.

[இராவணன் மருங்கு — ராவணன் உள்ள இடத்திற்கு.]

'மண்ணிடை இல்லையே; விண்ணிடை மறைந்தான்' என்றும், 'இன்னும் ஏதோ வஞ்சனை விளைக்கத்தான் இப்படி மறைந்திருக்கிறான்' என்றும் கண் கலங்க ஒருவரை யொருவர் நோக்கிச் சந்தேகத்துடனும் வருத்தத்துடனும் எதிரிகள் உரையாடிக் கொண்டிருக்கும் போதே, இந்திரஜித்து ராவணனுடன் உரையாடிக் கொண்டிருக்கிறான்,

ராவணன் திடுக்கிட்டுப் பார்க்கிறான், 'இதுவோ நிகும்பலை வேள்வியின் பயனாகிய வெற்றி' என்று. புண்களும் இரத்தமும் மூடிய உடம்பைப் பார்க்கிறான்.

எண்ணங்களில் மூழ்கிய முகத்தை நோக்குகிறான், பேசுகிறான்.

காவியத்துள் ஒரு வீர காவியம்

தந்தையைத் தெரிந்து கொள்ளவில்லை

பி. ஸ்ரீ

23

எதிரிகளின் கண் பார்வையிலிருந்து மறைந்தவன் தந்தையின் கண் பார்வையில் வந்து நிற்கிறான். போர்க்களத்திலிருந்து நேராகவே வந்திருக்கிறான்.

மனைக்குள்ளே போய் இரத்தத்தைத் துடைத்துக் கொள்ளாமலே வந்து நிற்கிறான்.

உடனே வந்த காரியத்தைச் சொல்லவில்லை. தந்தையுடன் காரியத்தைக் கலந்து ஆலோசிக்கவும் வரவில்லை. தானே ஆலோசனை செய்து முடிவு செய்துகொண்ட பின்பே பேச வந்தவன் தான்,

இன்னும் கொஞ்சம் ஆலோசனை செய்கிறான், 'இதை எப்படிச் சொல்வது ?' என்பதாக.

அம்பு சொன்னது

இந்த நிலையில் முதல் முதல் பேசுகிறவன் ராவணன்தான். இந்திரஜித்து வாயைத் திறப்பதற்கு முன்பே அந்த வேள்வி முற்றுப் பெறவில்லை யென்பதை ராவணன் ஊகித்துக் கொள்கிறான், எப்படி ?

'அம்பே என்னை அறிவித்தது' என்கிறான். இந்திரஜித்தின் தோள் மேல் அம்பு பதிந்திருப்பதே தெரிவித்து விடுகிறதாம்.

யானையோடு ஒரு தமிழ் வீரன் போர் செய்யும்போது, தன் உடம்பில் எதிரியின் வேல் பாய்ந்திருந்ததையும் அறிந்து கொள்ளவில்லையாம். தன் கை வேலை ஒரு யானையை நோக்கி வீசி அதைத் துரத்திய பின்பு, வேறொரு யானை தனக்கு எதிரே வருவதை அறிந்து கொண்ட பின்பே தன் உடம்பில் எதிரியின் வேல் ஒன்று பாய்ந்திருப்பதை அறிந்து கொண்டானும்.

இரண்டாவது யானை மீது வீச வேல் இல்லையே, கை வேலும் போய்விட்டதே என்ற எண்ணத்திலேதான் 'மெய்வேல்'—அதாவது, தன் உடம்பிலே தைத்திருக்கும் வேலைக் காண முடிந்தது. கண்டதும், 'இந்த வேல் இருக்கிறதே ! நமக்கு என்ன ?' என்று சிரிக்கிறானும் ஒரு வீரச் சிரிப்பு. இந்த வேலை உடம்பிலிருந்து பறித்துக் கொண்டே சிரிக்கிறானும்.

''இந்த வேலை அந்த வீரன் யானை மீது போட்டானா ? போட முடிந்ததா ? அல்லது அவன் கதை சோக நாடகமாய்த் தான் முடிந்ததா ?'' என்பது குறித்துக் கவிஞர் ஒன்றும் சொல்லவில்லை. திரை விழுகிறது; நாடகம் முடிகிறது.

இந்திரஜித்தோ தன் மேல் பதிந்திருக்கும் அம்பை இன்னும் அறிந்து கொள்ளவில்லை. அந்தத் தமிழ் வீரன் போர் வெறியால், வீரவெறியால் தெரிந்து கொள்ள வில்லையென்றால், இந்த அரக்க வீரன் 'ராவணேசுவரனை எப்படியாவது காப்பாற்றிவிட வேணும்' என்ற அந்த ராஜ பக்தி நினைவிலே, தன் தோளில் தைத்திருக்கும் அம்பையும் அறிந்து கொள்ளாமல் வந்து சேர்ந்திருக்கிறான்.

தன் கைவேலை ஒரு யானையுடன் போக்கிவிட்டான் அந்த வீரன். இவனோ தன் மிகச் சிறந்த அஸ்திரங்களையெல்லாம் லட்சுமணனை நோக்கி வீசி அவனை அசைக்க முடியாமல் இங்கு வந்து சேர்ந்திருக்கிறான்;

அங்கே வீரச் சிரிப்பைக் காண்கிறோம், இங்கே சிந்தனை தேங்கிய, ஆலோசனை ததும்பும் முகத்தைக் காண்கிறோம்.

இந்திரஜித்தின் உடம்பை வச்சிர தேகம் என்றே சொல்லவேண்டும். 'அழிவில்லாத உடல் நடுங்குவது போல மிகத் தளர்ந்திருக்கிறாயே !' என்று சொல்லும் ராவணன், மகன் தோள் மீது பதிந்த அம்பைப் பார்த்ததுமே 'நிகும்பலை யாகம்' அழிந்துவிட்டது என்று தீர்மானித்து விட்டான்.

ஆலோசனை தேங்கிய அந்த முகம்தான் இப்போது எப்படியிருக்கிறது? 'கருடன் நெருங்கப் படம் ஒடுங்கிக் கிடக்கும் நாகம் போலக் காண்கிறாயே! நடந்ததைச் சொல்லு' என்கிறான்.

சித்தப்பாவைமறக்க முடியவில்லை

இது கேட்டும் வந்த காரியத்தை உடனே சொல்லிவிடவில்லை இந்திரஜித்து. எவ்வளவு ஆத்திரத்துடன் விபீஷணனைத் தாக்கிப் பேசுகிறான்!

உம்முடைய தம்பி தான் நிலை



மைக்குக் காரணம் என்கிறான். அந்தத் 'தம்பி'யின் செயலால் வேள்விமட்டுமல்ல, தன் சிறந்த அஸ்திர சக்தியும் வீணாகி விட்டது என்கிறான்.

இப்படி விபீஷணன் இனத் துரோகியாகி, தேசத் துரோகியாகி, ராஜத் துரோகியாகி, அண்ணன் என்ற நேசத்தையும் அறுத்துக் கொண்டதற்கு அடிப்படைக் காரணம்தான் என்ன?

முத்தேவர் படையும் முதல் தேவன் படையும் எல்லாம் வீணாகிவிட்டதற்குத் தான் உட்பொருள் என்ன?

குலம் செய்த பாவத்
தாலே கொடும்பகை
தேடிக் கொண்டோம்!

என்கிறான், பழி பாவம் என்பதைச் சற்றும் ஒப்புக் கொள்ளாத இந்திரஜித்து.

இந்தப் 'பாவ'க் கொள்கை இந்த உள்ளத்தில் எப்படி உதயமாயிற்று? விபீஷணனுடன் சமீபத்தில் நடத்திய சம்பாஷணையின் விளைவு தானா?

அவன் கொட்டிய தரும முரசு இவனைத் தேள்போலக் கொட்டியதல்லவா? அந்தக் கடுப்பு இன்னும் ஆறவில்லை.

'பாவம் கொடியது; தருமமே சாலச் சிறந்தது' என்று சத்திய முரசு கொட்டத் தொடங்கிய விபீஷணன் தன் முடிவுரையிலும் 'அறத்தினைப் பாவம் வெல்லாது' என்பதை வற்புறுத்தினான்.



இந்திரஜித்தின் வீர வாதம் விபீஷணனின் சத்திய வாதத்தைத் துச்சமாகத் தூவென்று தள்ளி விட்டது. எனினும், அந்தப் 'பாவக் கொள்கை இந்திரஜித்தைத் திமிறிக் கொண்டு எப்படியோ உட்புகுந்து பதுங்கிக் கொண்டிருக்க வேண்டும்!

லட்சுமணனும் இந்திரஜித்தும்

இன்றைய அதி பயங்கர அணுக் குண்டுகளின் ஸ்தானத்தில் வைத்து மதிக்கத் தக்க அஸ்திரங்கள் இந்திரஜித்திடமும் இருந்தன; லட்சுமணனிடத்திலும் உண்டு. இந்த அஸ்திரங்களால் உலகத்திற்கே அழிவு நேரக் கூடும் என்பதையும் இருவரும் அறிந்திருப்பவர்களே.

அந்த நிலையில் இந்திரஜித்து அந்த அஸ்திரங்களைப் பிரயோகித்து விட்டான், லட்சுமணனோ தன்னையும் காத்து உலகத்தையும் காப்பாற்றி விட்டான்.

இந்திரஜித்தின் அந்த அஸ்திரங்கள் லட்சுமணனை அழித்திருந்தால் தொடர்ந்து உலகத்தையும் அழித்திருக்கும். லட்சுமணன் அத்தகைய அஸ்திரத்தைப் பிரயோகித்து இந்திரஜித்தை அழித்திருந்தாலும் அந்த அழிவு இந்திரஜித்துடன் நின்று விடாமல் உலகத்தையும் பிடித்திருக்கும்.

எனவே, அத்தகைய அஸ்திரத்தை லட்சுமணன்,

விட்டிலன் உலகை
அஞ்சி ; ஆதலால்
வென்று மீண்டேன்

என்கிருன் இந்திரஜித்து.

உயிருடன் மீண்டு வந்த இந் நிலையில் ராவணனைக் காப்பாற்றக் கூடும் என்ற நினைப்பிலே தான்,

வென்று மீண்டேன் !

என்கிருன். ராவணேசுவரனைக் காப்பாற்றுவதே வெற்றிதான் என்பது குறிப்பு.

லட்சுமணனின் போர்வீரத்தைக் காட்டிலும், 'விட்டிலன் உலகை அஞ்சி' என்று பேசுகிருனே, இந்த லட்சுமண நிலையே பெரு வீரமாகும் என்பது இப்போது இந்திரஜித்தின் கருத்து. லட்சுமணனது போர்வீரத்திற்கு அஞ்சாத நெஞ்சு 'லட்சுமணு! உன் அருளுக்கு அஞ்சினேன் !' என்று முறையிடுவது போலக் காண்கிறது.

முடிவாக இந்திரஜித்து கூறுவதைக் கேளுங்கள் :

'ஆதலால் அஞ்சி
னேன்என்(று) அருளலை;
ஆசை தான் அச்

சீதைபால் விடுதி—
யாயின் அனையவர்
சீற்றம் தீர்வர்;

போதலும் புரிவர்;
செய்த தீமையும்
பொறுப்பர்; உன்மேல்

காதலால் உரைத்தேன்'
என்றுன் உலகெலாம்
கலக்கி வென்றுன்

[அருளலை—நினைத்தருள வேண்டாம். சீதைபால்—சீதையிடம். விடுதியாயின்—விடுவாயானல். அனையவர்—அந்த ராம லட்சுமணர்.]

'நான் இப்படியெல்லாம் சொல்வதால் அஞ்சி விட்டதாக நினைத்து விடாதே' என்ற இந்திரஜித்தின் வார்த்தையை உறுதிப்படுத்துவது போல் அமைந்திருக்கிறது,

உலகெலாம் கலக்கி
வென்றுன்

என்ற கவிக்கூற்று.

ராவணன் பதில்

ராவணன் பதில் உலக இலக்கியத்திலேயே ஒப்பற்றதொரு பகுதியாகும் என்பது பேரறிவாளர் வ. வே. சு. ஐயரின் கருத்து.

ஆதலால் அஞ்சி
னேன்என்(று) அருளலை

என்று சொன்னவனை நோக்கி.

'ஒரே வில்லைக் கொண்டு இன்றே ஜயம் கொண்டு வருவேன்' என்று உறுதி கூறுகிருன் ராவணன்.

பிறகு 'குலம் செய்த பாவத்தாலே கொடும்பகை தேடிக் கொண்டோம்!' என்று சொன்ன இந்திரஜித்தை நோக்கி,

என்னையே நோக்கி
யான்இந் நெடும்பகை
தேடிக் கொண்டேன் !

என்று பதில் சொல்லுகிருன்.

'முன்னமே போருக்குப் போய் இறந்தவர்களெல்லாம் என்னுடைய பகையை முடித்து விடுவார்கள் என்று நான் நம்பியதில்லை. இன்னும் போருக்குச் செல்லாது நிற்பவரெல்லாம் இனி அந்தப் பகையை வென்று மீள்வர் என்றும் நான் நம்பவில்லை; நீ அவரை வென்று அந்த வெற்றியைக் கொண்டு வந்து தருவாய் என்றும் நான் கருதியிருக்க வில்லை' என்று சொல்லிவிட்டு, 'என்னையே நோக்கி யான் இந் நெடும்பகை தேடிக் கொண்டேன்!' என்று இறுமாந்து பேசுகிருன்.

'ஆசைதான் அச் சீதைபால் விடுதி' என்று இந்திரஜித்து சொன்னனல்லவா? இதற்கு ராவணன்,

சீதையை விடுவ—
துண்டோ, இருபது
தோள்உண் டாக?

என்று பதில் சொல்லுகிருன்.

ஒரு பெரிய கதையை, இதிகாசத்தை உருவாக்குவதில் தன் புகழுக்கும் பங்கு உண்டு என்கிறுன்.

எவ்வளவோ ராவண பக்தி கொண்டிருக்கும் மகனும் தந்தையைத் தெரிந்து கொள்ளவில்லையே !

வீரமும் செத்துப்போகுமே!

பி. ஸ்ரீ

24

சிகரத்திலிருந்து இறங்கிவந்து பேசினன் இந்திரஜித்து. சிகரத்தின் மேல் ஏறி நின்று நிமிர்ந்து பதில் சொன்னன் ராவணன்.

வீரம், விவேகம், வெற்றி

வீரத்தில் செம்பாதிக்கு மேல் விவேகம் என்ற கருத்துடன் பேசினன் இந்திரஜித்து. வீரமே விவேகம் என்ருன் ராவணன்.

இந்திரஜித்துக்குத் தந்திரமும் விவேகம்தான். வஞ்சனை, மாயம், எதிரியின் கருணை அறப்பற்று முதலிய வற்றைப் பலவீனமாக மதித்துப் பயன் படுத்திக் கொள்வது—இவை யெல்லாம் விவேகம் தான். இந்த விவேகத்தால் அடைவதும் வெற்றிதான்! இந்த வெற்றியைச் சீதையை விட்டு விட்டால் அடைய முடியும் என்ருன் இந்திரஜித்து.

ராவணனுக்கோ முதலைப் பிடிதான் விவேகம். வெற்றி! பிடித்ததை விடுவதுதான் தோல்வி, உயிரை விடுவது கூடத் தோல்வியாகாது என்கிருன்.

ராமனே ஒரு வேளை வென்ருலும் அந்த வெற்றிப் புகழிலும் செம்பாதி நன் வீரப்புகழாகத்தானே இருக்க முடியும் என்கிருன்.

வென்றிலன் என்ற போதும்,
வேதம்உள் ளளவும் யானும்
நின்றுளன் அன்றே, மற்(று)
அவ்
இராமன்பேர் நிற்கு மாயின்?

என்பது ராவணன் தலைசுழல ஏறி நின்று பேசும் வீரசிகரம்.

இந்தச் சிகரத்திலிருந்து கர்ஜிக்கிருன்,

எட்டு வே(டு) இரண்டும்
ஆன திசைகளை
எறிந்து வென்றேன்

என்று:

அந்த வெற்றியோடு பொருந்தும் செயல் அல்ல சீதையை விட்டு உயிரையும் அரசையும் காப்பாற்றிக் கொள்வது என்பது ராவணன் கட்சி.

இந்த நிலையில் தன் கொள்கையை இந்திரஜித்துடன் விவாதிக்கவும் விரும்பவில்லை. 'ஓ, பையா! நீ போர்த் தொழிலில் சிரமப்பட்டிருக்கிருய்; சிரமத்தைப் போக்கிக் கொள்; தோளிலிருந்து அம்புகளை எடுத்து விட்டுப் போய்த் தூங்கு!' என்று சொல்லி எழுந்திருக்கிருன்.

பிறகு 'வருக தேர்' என்கிருன். புலி கோபத்துடன் வாய் திறந்து அப்படிப் பேசியது போலத் தோன்றுகிறதாம்.

இந்திரஜித்தின் ராவணபக்தி

எழுந்த ராவணனது காலில் விழுந்து தொழுகிருன் இந்திரஜித்து. 'கோபம் ஒழிந்தருள வேணும், தந்தையே!' என்று பிரார்த்திக்கிருன். 'சொன்ன உறுதியைப் பொறுத்துக் கொள்ள வேணும்' என்கிருன்.

ஆனல் தான் சொன்னது ராவணனுக்கு நன்மை பயக்கும் உறுதிமொழி தான் என்பதில் சிறிதும் ஐயமில்லை இந்திரஜித்துக்கு.

தான் போருக்குப் போய் இறந்த பின் ப்பாவது தன் உறுதிமொழியைத் தந்தை நல்லதாகக் காண வேண்டும் என்கிருன்.

'ஒழிந்தருள் சீற்றம்;
சொன்ன உறுதியைப்
பொறுத்தி; யான்போய்க்
கழிந்தனன் என்ற
பின்னர், நல்லவா
காண்டி' யென்று

மொழிந்தனன்:

[கழிந்தனன்—கழிந்தேன்; இறந்தேன்: நல்லவா—நல்லனவாக.]

தன் தேர் அழிந்ததும் இனி ''அழிவிலாத் தேர் மேல் அன்றிப் போர்த் தொழில் புரியலாகாது'' என்ற நோக்கத்துடன் திரும்பியவனல்லவா? அத்தகைய தெய்வத் தேரைக் கொண்டு வருமாறு கட்டளையிட்டு ராவணனிடம் வந்திருக்க வேண்டும். அந்தத் தேர் இப்போது சித்தமாக வந்து நிற்கிறது.

அதில் ஏறிக் கொள்ளும் இந்திரஜித்தைக் கவிஞன் சுட்டிக் காட்டுகிறான்:

தெய்வத் தேர்மேல்
ஏறினன் முடிய-
லுற்றான்.

[முடியலுற்றான்—முடிந்து போவதை நிச்சயித்துக் கொண்டவனான் இந்திரஜித்து.]

தன் உடைமைகளை யெல்லாம் விரும்பினவர்களுக்குக் கொடையாகக் கொடுத்து விடுகிறான். படைக்கலங்களைத் தவிர எல்லாவற்றையும் இப்படித் தானம் செய்து விட்டுப் புறப்படுகிறான்.

போகும் போதே ராவணனை அடிக்கடி கடைக்கண்ணால் பார்த்துக் கொண்டே போகிறானாம். அந்தப் பார்வையையும் கண்ணீர் திரையிட்டு மறைக்கிறது. என்ன கொடுமை!

கொடைத் தொழில் வேட்டோர்
க்(கு)
எல்லாம் கொடுத்தனன்;
கொடியோன் தன்னைக்
கடைக்கணால் நோக்கி
நோக்கி இருகணீர்
கலுழப் போனான்.

[வேட்டோர்க்கு—விரும்பினவர்களுக்கு, கலுழ—பெருக.]

'இனி நான் தந்தை முகத்தில் விழிக்கப் போவதில்லையே!' என்று திரும்பிப் பார்த்தான். 'என் உறுதி மொழிப்படி நடந்து கொள்ளாமல், ஐயோ! நாசம் அடையப் போகிறானே' என்ற நோக்குடனும் திரும்பிப் பார்த்தான்.

தனக்குத் தானே கொடியோனாகவும் இருக்கிறானே என்ற குறிப்பும் தொனிக்கிறது, ராவணனைக் 'கொடியோன்' என்று குறிப்பிடுவதில்.

இந்திரஜித்துமீது பக்தி

(இரட்டைத் திறவுகோல்)

போர்க்களத்திற்குப் போகாமல் இலங்கையின் சேமப்படையாக இருந்த அரக்க வீரர்களெல்லாம் விரைந்து வந்து இந்திரஜித்தைப் பிரதட்சிணம் செய்கிறார்கள். 'உன்னைப் பிரிவோமா? எங்களுக்கும் சாகத் தெரியுமே!' என்று தொடர்கிறார்கள்.

அப்போது இந்திரஜித்தின் தோள் பூரிக்கிறது. உள்ளம்தான் எப்படிப் பூரித்திருக்க வேண்டும்! 'மன்னவனைக் காப்பதே உங்கள் கடமை; கொஞ்சமும் கலங்க வேண்டாம்' என்று அவர்களைத் தேற்றுகிறான். 'இப்போதே நான் போய் மனிதரை ஒழித்து விடுகிறேன்' என்கிறான்.

இந்த அரக்க வீரர்களின் உள்ளத்தை எப்படி வசிகரித்திருக்கிறான் இந்திரஜித்து!

இந்திரஜித்தின் குணாதிசயத்தை எடுத்துக் காட்டும் ஒரு தங்கத் திறவுகோல் இப்பாட்டு:

இலங்கையின்
நிருத-
ரெல்லாம் எழுந்தனர்
விரைவின் எய்தி,



'விலங் கலந் தோள !
நின்னைப் பிரிகலம் ;
விளிதும் ' என்னு,

வலங்கொடு தொடர்ந்தார்
தம்மை, 'மன்னனைக்
காமின் ; யாதும்

கலங்கலிர்; இன்றே
சென்று மனிதரைக்
கடப்பல் !' என்ருன்.

[நிருதர்—அரக்கர்கள். எழுந்தனர்—எழுந்து. விலங்கல் அம்தோள—மலை போன்ற அழகிய தோளை உடையவனே. நின்னைப் பிரிகலம்—உன்னைப் பிரியோம். விளிதும்—இறப்போம்; என்னு—என்று சொல்லி, வலங்கொடு—பிரதட்சிணம் செய்து. காமின்—காத்து நில்லுங்கள். யாதும் கலங்கலிர்—கொஞ்சமும் நீங்கள் கலங்க வேண்டாம். கடப்பல்—கடந்து விடுவேன்; வென்று விடுவேன்.]

இந்திரஜித்தின் குணதிசயத்திற்கு வேருெரு திறவுகோலும் காண்கிருேம். அரக்க வீரர்களின் பேரன்பிற்கு உரியவனுக இருக்கும் இந்திரஜித்து அரக்க மகளிரின் பேரன்பிற்கும் உரியவனுக இருக்கிருன்.

பெண்கள் இந்திரஜித்துக்கு இரு புறமும் நெருங்கி வருகிருர்கள், வணங்குகிருர்கள், வாழ்த்துகிருர்கள். இந்திரஜித்தின் வீர சௌந்தரிய வடிவத்தைப் பார்த்த வண்ணம் வாய் உலரப் பெருமூச்செறிகிருர்கள். உள்ளம் உருகி நடுங்கி நிற்கிருர்கள்.



காதணிகள் மின்ன நெருங்கி வந்து வந்து கதறுகிறார்கள், கடைக் கண்ணால் நோக்கி நோக்கி. எந்தப் போர்வீரம் இந்தப் பார்வையை, இந்தப் பாசத்தை எளிதில் கடந்து அப்பால் செல்ல முடியும்?

போர்க்களம் போவதற்கு முன்பே ஒரு போர்க்களத்தில் சிக்கிக் கொண்ட நிலைதான் இப்போது இந்திரஜித்துக்கு. அந்தப் போர்க்களத்தில் முன்னேறுவதைக் காட்டிலும் இந்தப் போர்க்களத்தில் முன்னேறிச் செல்வது கஷ்டமாயிருக்கிறதாம். அந்தக் களத்திலே பாய்ந்து வரும் அஸ்திர சஸ்திரங்களைக் காட்டிலும் இந்தப் பெண்களின் கடைக்கண் பார்வையென்னும் நெடு வேல்கள் அதிகமாக ஹிம்ஸிக்கின்றனவாம்.

இந்திரஜித்து இப்போது எப்படியோ சமாளித்துக் கொண்டு கடந்து செல்லும் இந்தப் போர்க்களத்தின் சித்திரத்தைப் பாருங்கள்:

வணங்குவார், வாழ்த்து
வார், தன் வடிவினை
நோக்கித் தம்வாய்
உணங்குவார், உயிர்ப்பார்,
உள்ளம் உருகுவார்,
வெருவல் உற்ற

கணங்குழை மகளிர்
ஈண்டி இரைத்தவர்
கடைக்கண் என்னும்
அணங்குடை நெடுவேல்
பாயும் அமர்கடந்(து)
அரிதிற் போனான்.

[உணங்குவார் — உலரப் பெறுவார். உயிர்ப்பார்—பெருமூச்செறிவார், வெருவல் உற்ற — அச்சம் பொருந்திய. கணங்குழை — திரண்ட காதணிகள். ஈண்டி — நெருங்கி. இரைத்தவர் — கதறுகிறவர். அணங்கு உடை — வருத்தும் தன்மையுள்ள. அமர் — (இங்கே) அமர்க்களம்; போர்க்களம்.]

கவிச் சுவையுடன் ஓத ஓத, அந்த அமர்க்களமே ஓடி வருகிறது நம் அகக்கண் முன். இந்திரஜித்தின் வீர குணாதிசயத்தை இப்படியெல்லாம் உருவாக்கி இவனுடைய வீர மரணத்தை வியப்புடன் எதிர் நோக்கச் செய்கிறது கம்பன் கவிதை;

இந்திரஜித்தும் லட்சுமணனும்

இந்திரஜித்து தேரில் வந்து கொண்டிருக்கிறான் எதிரிகளை நோக்கி. லட்சுமணனோ கையிலெடுத்த வில்லை அப்படியே வைத்துக் கொண்டு இந்திரஜித்து மறைந்து போன அந்த வான வெளியை நோக்கிய வண்ணம் நிற்கிறான்! அருகே நிற்கிறான் விபீஷணன்.

விபீஷணனைப் பார்க்காமலே அந்த வான வெளியைப் பார்த்துக் கொண்டே 'விபீஷணா' என்று கூப்பிடுகிறான் லட்சுமணன். 'தீயோன் அப்பால் போயினன் ஆதல் வேண்டும்' என்கிறான்.

'வஞ்சனை விளைப்பான்; அதற்காக மறைந்திருக்கிறான்' என்று வானர வீரர்கள் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார்களல்லவா? 'அப்படி ஒன்றும் செய்துவிடவில்லையே' என்கிறான், லட்சுமணன். அப்போது நடப்பதென்ன?

'போயினன் ஆதல்
வேண்டும்; புரிந்திலன்
ஒன்றும்!' என்பான்,

ஆயிரம் புரவி
பூண்ட தேரின்பே—
ரரவம் கேட்டான்.

[புரிந்திலன் ஒன்றும்—ஒன்றும் செய்துவிடவில்லையே. புரவி — குதிரைகள். பேரரவம் — மிக்க ஓசை.]

இந்திரஜித்தின் ஆயிரம் குதிரைகள் பூட்டிய அழியாத தெய்வத் தேர் வருவதென்றால், அந்தப் பேரோசை எப்படியிருக்க வேண்டும் என்பதையும் சப்த ஜாலங்களால் காட்டுகிறது கவிதை. மூலத்தில் படித்து அனுபவிக்க வேண்டியதுதான்.

இறுதிப் போர் தொடங்கி விடுகிறது. இந்திரஜித்தின் வீரத்தைத் தேவர்களும் வியந்து,

வீரர்என் பார்கட் —
கெல்லாம் முன்னிற்கும்
வீரர் வீரன்

என்று பாராட்டுகிறார்கள்.

லட்சுமணனும், 'ஐயோ! வீரமும் செத்துப்போகுமே இவனுடன்!' என்று வியக்கிறான்!

ஐயனும் 'இவனோ(டு)
எஞ்சும் ஆண்தொழில்
ஆற்றல்!' என்றான்.

[எஞ்சும் — ஒழிந்தேபோகும். ஆண் தொழில் ஆற்றல் — வீரத் தொழிலாய வல்லமை.]

காவியத்துள் ஒரு வீர காவியம

லட்சுமணா! இது உன் வெற்றி அல்ல!

பி.ஸ்ரீ

25

இந்திரஜித்தைக் கொல்லப் போகும் தன்னுடைய பாணம் வீரத்தையே கொன்று தீர்த்து விடுமோ என்று லட்சுமணன் கருதினான். இந்திரஜித்தோ தான் சாகும் போது எப்படியாவது லட்சுமணனையும் தீர்த்து விடுவோம் என்ற எண்ணத்துடன் 'நின்னை முடித்தன்றி முடியேன்!' என்று கர்ஜிக்கிறான்.

இந்திரஜித்து கையில் பிடித்திருந்த வில்லைத் துண்டிக்க முடியாமல் அந்தக் கையோடு கொய்து தள்ளி விடுகிறது, லட்சுமண பாணம். பற்றிய வில்லோடும் விழுந்த கை கீழே யிருந்த சில வானரங்களையும் கொன்று விட்டதாம்.

இந்திரஜித்தின் மரணம்

இந்திரஜித்தின் தலையும் அறுக்கப்பட்டு மண் மேல் விழுகிறது. இந்திரஜித்து இறந்ததும் அரக்கர்கள் தரித்து நிற்க முடியாமல் ஆயுதங்களைப் போட்டு விட்டு நிலைகெட்டு மூலைக்கு ஒருவராய் ஓடுகிறார்கள்.

இலங்கைக் கோட்டை மதிலை நோக்கித்தான் இவர்களைத் தற்காப்பு-நோக்கு தள்ளிக் கொண்டு போகிறது. ஆனால் இவர்கள் எல்லாரும் கோட்டைக்குள்ளே போய்ச் சேர்ந்து விட்டார்களா என்பது குறித்துக் கவிஞன் பிரஸ்தாபிக்கவில்லை.

இந்த அரக்கர்களும் இந்திரஜித்தும் உடம்பும் உயிரும் என்று சொல்லும்படி அத்தகைய தொடர்புடன் வாழ்ந்தவர்கள் என்று சொல்லக்கூடும். ஆனால் கவி எப்படிச் சொல்லப் போகிறான்?

உயிருக்கு உணர்வும் ஐம்பொறிகளும் அந்தக்கரணம் என்ற உட்கருவிகளும் போல் அமைந்திருந்தார்களாம் இந்திரஜித்துக்கு இந்த அரக்கர்கள்.

'இப்போது ஓடி விட்டார்களே!' என்றால், அதற்குக் கவிஞன் விடை 'இந்திரஜித்து உயிரோடிருந்தால் அவர்கள் அப்படி ஓடிப் போயிருக்க மாட்டார்கள்! அவனுக்காக உயிரைக் கொடுத்திருப்பார்கள்!' என்பது தான்.

இந்த விடை வெளிப்படையாகக் கூறப்படவில்லை. இதை உய்த்துணர வைத்துக் கவிஞன் அமைத்திருக்கும் உவமைக் கவிதை அதிசயமானது!

> உயிர் இறப் புக்க
> காலை, உள் நின்ற
> உணர்வி னோடும்
>
> செயிர் அறு பொறியும்
> அந்தக் கரணமும்
> சிந்துமா போல்,
>
> அயில் எயிற்(று) அரக்கர்
> உள்ளார் ஆற்றல-
> ராகி, ஆன்ற
>
> எயி லுடை இலங்கை
> நோக்கி இரிந்தனர்,
> படையும் விட்டார்.

[இறப்புக்க காலை—நீங்கத் தொடங்கிய காலத்தில். செயிர் அறு—குற்றம் அற்ற. பொறியும்—ஐம் பொறிகளும். அந்தக் கரணமும்—உட்கருவிகளும். சிந்துமா போல்—சிந்திப் போவது போல். அயில் எயிற்று அரக்கர் உள்ளார்—கூரிய பற்களையுடைய அரக்கராகியுள்ளவர்கள். ஆற்றலராகி—தரித்து நிற்க முடியாதவராகி. ஆன்ற எயிலுடை இலங்கை—சிறந்த மதிலையுடைய இலங்கை. இரிந்தனர்—நிலை கெட்டு ஓடினார்கள். படை—ஆயுதங்கள்.]

ஒருவனுக்கு மரணம் வருகிறது. உயிர் நீங்கத் தொடங்கியபோதே, அது (உயிர்) சேர்த்துக் கோத்துத் தாங்கி வைத்திருந்த உணர்வும் சிந்திப் போகிறது; ஐம்பொறிகளும் தங்கள் உட்கருவிகளுடன் சிந்திப் போகின்றன.

அவை எங்கே போகின்றன? நாம் அறியோம். அப்படிச் சிந்திப் போகிற

தாம் அரக்கர் சேனையும், இந்திரஜித்து என்ற உயிர் பிரிந்ததும்.

இந்திரஜித்தே ராட்சஸ லங்கையின் உயிர். இந்த உயிரை இழந்ததும், அந்தக் களத்திலே, அந்தச் சேனையில் உள்ளவர்கள் தரித்து நிற்க இயலாதவர்களாய்ச் சிதறிப் போகிறார்கள். — எங்கே? நாம் அறியோம்.

எனினும் தற்காப்பு — நோக்கு இலங்கைக் கோட்டை மதிலை நோக்கித்தான் செலுத்தியிருக்க வேண்டும். ஆனால் உடம்பில் வாழும் போது உயிருடன் தொடர்பு கொண்டிருந்த உணர்வு முதலியன எந்தக் கோட்டைக்குள் எப்படி அடைக்கலம் தேடிக் கொள்ளும்? உயிர்தான் எங்கே போகிறது? இந்தப் பிரசினை இப்போது கவிஞனுக்கு இல்லை.

'முழுமுதற் கடவுளே மூச்சற்றுக் கிடக்கிறான் அல்லது செத்துப் போய் விட்டான்!' என்பது ராவண சித்தாந்தம். இதை ஒட்டியே வாழ்க்கையும் வாழப்படுகிறது. இத்தகைய சித்தாந்தத்திலோ, அனுஷ்டானத்திலோ, மரணத்திற்குப்பின் உயிரின் கதி குறித்தோ, உணர்வின் நிலை குறித்தோ நினைத்துப் பார்ப்பதற்கே இடமில்லை; ராவணாதி ராட்சஸர்களுக்கு அவகாசமும் இல்லை.


இந்த ராட்சஸ சித்தாந்தக் கண் கொண்டு ஒரு மரணத்தை உற்று நோக்குவது போல் அமைந்திருக்கிறது இந்தக் கவிதை. இத்தகைய சித்தாந்தத்திலுள்ள ஐயந்திரிபுகளை இந்தப் பாட்டிலும் காண்கிறோம்.

சிந்திக்கச் சிந்திக்க மேன்மேலும் ஊறி வரும் சிந்தனைகளுக்கெல்லாம் ஓர் ஊற்றுக் கண் போல் அமைந்திருக்கும் இப்பாட்டைக் கவிதையுலகில் ஓர் அதிசயமென்றே கருதுவது பொருந்தும்.

இந்திரஜித்தின் மரணம் ஒரு புறம் கலக்கத்தையும் சோகத்தையும் தோற்றுவிப்பது போல், ஒரு புறம் மகிழ்ச்சியையும் வெற்றிக் கொண்டாட்டத்தையும் தோற்றுவிக்கிறது.

விண்ணும் மண்ணும் மகிழ்கின்றன. ராட்சஸ உள்ளங்களிலோ சோக இருள் அடர்ந்திருக்கிறது. எங்கும் ஆரவாரம். ஒரு புறம் மகிழ்ச்சி—ஆரவாரம்; ஒரு புறம் அழுகை—ஆரவாரம்.

தேவர்களின் மகிழ்ச்சி—ஆரவாரத்தை வருணித்து விட்டுக் கம்பன், ராமனது பாசறையில் வெற்றிக் கொண்டாட்டத்தை வருணிக்கப் போகிறான். பிறகு ராவண சோகம் ஒரு தனிப் படலமாகிறது.





விண்ணில் மகிழ்ச்சி

தேவர்களின் மகிழ்ச்சியைத்தான் எவ்வளவு நகைச் சுவையுடன் வருணிக்கிருன்! சுருங்கச் சொன்னுல், நமது தேவர்கள் ஜைன தேவர்கள் போலக் காட்சி யளிக்கிருர்களாம்.

இந்தக் காட்சியைப் பாட்டுக் கண்ணுடியிலேயே பார்த்து விடலாம்:

வில்லாள ரானூர்க்—
  கெல்லாம் மேலவன்
  விளித லோடும்,

'செல்லா(து) அவ் இலங்கை
  வேந்தற்(கு) அர(சு)'
  [எனக்

  களித்த தேவர்

எல்லாரும் தூசு
  நீங்கி ஏறிட
  ஆர்த்த போது,

கொல்லாத விரதத்
  தார்தம் கடவுளர்
  கூட்டம் ஒத்தார்!

[மேலவன் — மேலானவனை இந்திரஜித்து, விளிதலோடும்—இறந்தவுடனே. வேந்தற்கு—வேந்தனுக்கு, தூசு—ஆடை. ஏறிட—உயரத்தில் ஏறுவது போலக் குதிக்க. ஆர்த்த போது—ஆரவாரம் செய்தபோது. கொல்லாத விரதத்தார் தம்—கொல்லா விரதம் கொண்ட ஜைன சமயிகளுடைய.]

பலர் கூடிய இடத்தில் ஒருவனுக்கு உடுத்த ஆடை நெகிழ்ந்து விட்டால், அப்போது அவன் அறியாமலே அவன் கை அந்த ஆடையை உடுத்தி மானம் காக்கிறது என்ற அநுபவ உண்மையை நட்பிற்கு உபமானமாக்கியுள்ள குறள் பிரசித்தமானது;

உடுக்கை இழந்தவன்
  கைபோல, ஆங்கே

இடுக்கண் களைவதாம்
  நட்பு.

[உடுக்கை — உடுக்கப்படுவது; உடை. ஆங்கே — அப்பொழுதே. இடுக்கண் — துன்பம்.]

ஆடை குலைந்தவன் கை மனத்தைக் காட்டிலும் முற்பட்டு மானம் காப்பதைத் திருவள்ளுவர் பிரஸ்தாபிக்க, அவரது ஞான பரம்பரையில் வந்த கம்பனே, ஆடை குலைந்த நிலையிலே குதித்துக் கூத்தாடுவோரைச் சுட்டிக் காட்டுகிருன்.

சிநேக தருமத்திற்குத் திருவள்ளுவர் காட்டிய உபமானத்தைக் காட்டிலும் பொருத்தமானதோர் உபமானத்தைக் காட்ட முடியுமா? இங்கே உடுக்கை

இழந்தவர்களுக்குக் கையும் நட்பாக உதவவில்லை யென்பதைக் கொண்டே, மகிழ்ச்சி வெறியின் எல்லையைச் சுட்டிக் காட்டி விடுகிறான் கம்பன்.

ராவணன் ராட்சஸ சக்கரவர்த்தி யென்றால், கையிலே வில்லைப் பிடித்தவர்களுக் கெல்லாம் ஒரு சக்கரவர்த்தி என்று சொல்லும்படி இருந்தானும் இந்திரஜித்து. இந்தச் சக்கரவர்த்தியை இழந்த அந்தச் சக்கரவர்த்திக்கு இனி அரசு செல்லாது என்று கூத்தாடும் தேவர்கள் ஜைன திகம்பர தேவர்கள் போலக் காணப் படுகிறார்களாம்.

இப்படிக் கூறுவதிலே வெளிப் படையாக நகைச் சுவை தோன்றுவதுடன், உள்ளுக் குள்ளே ஜைன தெய்வங்களின் பற்றற்ற நிலைகுறித்த வியப்பும் புதைந்து கிடக்கிறது எனலாம்.

ராமன் பாசறையில்

தேவர்களின் மகிழ்ச்சி வெறி கண்டதும், ராமன் முதலானவர்களின் மகிழ்ச்சிப் பெருக்கையும் அறிய விரும்புகிறோம். இங்கே அந்த வெறி காணப் படவில்லை; எனினும் மகிழ்ச்சிக்குக் குறைவில்லை.

ஆற்று வெள்ளம் எவ்வளவு அதிகரித்து வந்தபோதிலும், குன்றென உயர்ந்திருக்கும் கரைகளுக்கு அடங்கிப் பாய்வது போல் பெருகுகிறது மகிழ்ச்சி ராம லட்சுமணர்களிடையே.

வெற்றிச் செய்தியை ராமன் அறிந்து கொள்வதே நாடகத்திறமையுடன் ஆரம்பமாகிறது. இந்திரஜித்தின் தலை விழுந்ததும் அதை அங்கதன் போய்த் தன் கையில் எடுத்துக் கொள்கிறான்.

அந்தத் தலையைத் தூக்கிய வண்ணம் ராமனை நோக்கிப் புறப்படுகிறான். அவ்வளவு மகிழ்ச்சி அங்கதனுக்கு.

அங்கதன் கையில் இந்திரஜித்தின் தலையைக் கண்டதும் ராமனுடைய மகிழ்ச்சி கலந்த நினைவுகள் வருணிக்கப்படுகின்றன.

பிறகு லட்சுமணன் வருகிறான், அனுமன் தோள்மேல் ஏறிய வண்ணம். இந்த நிலையில் லட்சுமணனைக் கண்டதும் ராமனுடைய மகிழ்ச்சி வருணிக்கப் படுகிறது.

ராமன் அடிகளில் இந்திரஜித்தின் தலையைப் பாதகாணிக்கை இடுவது போல் வைக்கிறான் அங்கதன். அந்தத் தலையை நோக்கி லட்சுமணன் தோளையும் நோக்குகிற ராமனுடைய மகிழ்ச்சி வருணிக்கப் படுகிறது.

வணங்கிய தம்பியைத் தழுவிக் கொண்டு தமையன் தன் மகிழ்ச்சிப் பெருக்கை வெளியிடுவது தான் எவ்வளவு கற்பனைத் திறனுடன் சித்திரிக்கப் படுகிறது!

முதல் முதல் அங்கதனை இந்திரஜித்தின் தலையுடன் கண்ணுற்றதும் ராமனுடைய மகிழ்ச்சி வாக்குப் பிரவாகமாயிற்று. லட்சுமணனைக் கண்டது தான் தாமதம்; வாக்குப் பிரவாகம் வறண்டு போகிறது.

உணர்ச்சி பெருகுகிறது; கண்ணீரும் பெருகுகிறது; கை ஏதேதோ செய்கிறது; ஆனால் வாய் பேச மறுக்கிறது.

கடைசியாகத் தம்பியின் நிகரற்ற வெற்றியைப் பாராட்டி ஒரு வார்த்தையாவது சொல்ல வேண்டாமா? வாய் திறந்து 'ஆடவர் திலகமே' என்று உளம் குளிர அழைக்கிறது அருமைத் தம்பியை. ஆனால் வெற்றி குறித்த பாராட்டு வெளிப்படுகிறதா?

'லட்சுமணா! இது உன் வெற்றி அல்ல!' என்று தான் விரதிலகத்தை நோக்கி ராமன் சொல்லுகிறான். ஏன் இப்படி?

விபீஷணன் தந்த வெற்றி

பி. ஸ்ரீ

26

(ஒரு குட்டி நாடகம்)

இந்திரஜித்தின் வீழ்ச்சி குறித்து வானரவீரர் அனைவர்க்கும் ஒரே மகிழ்ச்சி. எனினும் இந்தக் கூட்டத்தில் வாலி குமாரனது மன மகிழ்ச்சியைச் சிறப்பாகச் சுட்டிக் காட்ட விரும்பு கிறான் கவிஞன்.

ஒரு தூது கோஷ்டி

துள்ளி ஓடி அந்தத் தலையைத் தூக்கிக் கொள்ளச் செய்கிறது அங்கதனுள்ளத்திலே ஊறிப் பொங்கிய மகிழ்ச்சி :

ஆக்கையி னின்று
 வீழ்ந்த அரக்கன்தன்
 தலையை அங்கை
தூக்கினன், உள்ளம்
 கூர்ந்த வாலிசேய்.

[ஆக்கை யினின்று — உடம்பிலிருந்து. அங்கை — அழகிய கையில். உள்ளம் கூர்ந்த — உள்ளத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கப் பெற்ற. வாலிசேய் — வாலிபுத்திரன்.]

மகிழ்ச்சிச் செய்தியை ராமனிடம் தெரிவிக்க வேண்டாமா? அங்கதன் தயாரா யிருக்கிறான். ஆனால் இவன் மட்டும் போய்த் தெரிவிக்க வில்லை.

ஒரு சிறு கூட்டமே தூதாகப் போகிறது. சின்னஞ்சிறு கூட்டம் தான். நால்வர் அடங்கிய சிறு கோஷ்டி.

இவர்கள் சேர்ந்து வரவுமில்லை ; ஒரு விநோத கோஷ்டி. இந்தக் கூட்டத்தின் முன்னணியிலே மகிழ்ச்சிச் செருக்குடன் வருகிறான் வாலி குமாரன்.

இவன் தூது சொல்லவு மில்லை; சொல்லாமல் சொல்லத்தான் போகிறான். கையில் ஏந்திய தலை சொல்லாததையா வாய் சொல்ல முடியும் ?

தூது கோஷ்டியின் முன்னணி இப்படி. பின்னணியில் — தூரத்திலே தான் — விபீஷணன் மெள்ள வந்து கொண்டிருப்பதைக் காண்கிறோம். வருவது தெரியாமல் வருகிறான். நடுவில் வருகிறான் லட்சுமணன்.

அனுமன் லட்சுமணனைத் தோள்மேல் சுமந்து கொண்டு வருகிறான், சுமை தெரியாத மகிழ்ச்சியுடன்.

அனுமன்மேல் இளவல்
 போனான்.

[இளவல் — தம்பி லட்சுமணன்.]

இந்த இருவரும் முன்னே போகும் வாலிமகனின் குதூகலத்தையும் 'ராஜ பக்தி'யையும் வியந்து கொண்டே போயிருப்பார்கள். பின்னே சற்றுத் தூரத்தில் வந்து கொண்டிருக்கும் விபீஷணனை இவர்கள் பார்த்திருப்பதும் சந்தேகமே.

கவிஞனே இப்போது விபீஷணன் வருகையை மறந்திருப்பது போல் அமைந்திருக்கிறது இந்தக் கம்ப நாடகக் காட்சி.

இந்தத் தூது கோஷ்டியின் நடு நாயகமாக வெற்றி வீரனை அனுமன் தோள்மேல் காட்டித் தேவர்கள் பூமாரி பொழிவதையும் காட்ட விரும்புகிறான் கவிஞன்.

ஆனால் லட்சுமணன் நிலையாக ஓரிடத்தில் நிற்காமல் போய்க் கொண்டேயிருக்கிறானல்லவா ? வானவர்கள் அள்ளிய பூக்களைத் தொடர்ந்து வீசிய வண்ணம் வானவீதியில் நடக்கிறார்களாம்.

அப்படி விழும் பூக்கள் ஓர் அதிசயப் பூம்பந்தலாகத் தோன்ற, அந்தப் பந்தலின் நிழலில் வருகிறான் வெற்றி வீரன், தன் விஜய சௌந்தரியத்திற்கு இசைய:

மேக்குயர்ந்(து) அமரர்
 வெள்ளம் அள்ளியே
 தொடர்ந்து வீசும்
பூக்கிளர் பந்தர்—
 நீழல் அனுமன்மேல்
 இளவல் போனான்.

[மேக்குயர்ந்து — வானத்தில் உயர இருந்து. அமரர் வெள்ளம் — தேவர் களின் கூட்டம். பூக்கிளர் பந்தர் — பூம்பந்தல்.]

அங்கதனுக்குப் பாராட்டு

அங்கதனை ராமன் பார்த்ததுமே, வெற்றிச் செய்தி தெரிந்து விடுகிறது. தோள் பூரிக்கிறது. பழி மெலிந்து தேய்கிறது. மேலும் மேலும் மகிழ்ச்சி ஓங்குகிறது.

'வன் றலை எடுத்து
நீமுன் வருதலால்
வானரேச!

என் தலை எடுக்க
லானேன்; இனிக்குடை
எடுப்பன்' என்றான்.

[வன்றலை - வலிய தலை. வானரேச- வானரர் தலைவனே. குடை — (இங்கே) அரசுரிமையின் சின்னமாகிய வெண் கொற்றக் குடை.]

இப்படி ராமன் சொன்னதும் அந்தத் தலையை ராமன் முன் வைக்க விரும்பிய அங்கதன் திடீரென்று ஒதுங்கி நிற்கிறான். காரணம்: லட்சுமணன் சற்றுத் தூரத்தில் வந்து கொண்டிருப்பதை அங்கதன் பார்த்து விடுவது தான்.

அங்கதன் ஒதுங்கி நின்றதும் ராமன் பார்வையும் லட்சுமணன் மீது விழுகிறது. அவனைத்தானே மனம் நினைத்துக் கலங்கிக் கொண்டே யிருந்தது?

தம்பிக்குப் பாராட்டே இல்லை!

'மாயச் செயல்களில் நிபுணனான இந்திரஜித்தை லட்சுமணன் எப்படி வெல்லப் போகிறானோ?' என்று நெஞ்சு மிகவும் கலங்கியதுண்டு. 'நிச்சயமாகப் போரில் வெற்றி பெற்று மீண்டு வருவான்' என்ற நம்பிக்கையும் உண்டு. இந்த நம்பிக்கைக்கும், அந்தக் கலக்கத்திற்கும் இடையே உள்ளம் ஊஞ்சலாடியது.

'தருமமே! நீதான் என் தம்பியைத் தாங்கிக் காப்பாற்றிக் கொண்டு வந்து சேர்க்கவேணும்' என்ற பிரார்த்தனை ஒரு ஜபம் போல் நிகழ்ந்து கொண்டிருந்ததாம் ராமனது இதயப் பிரதேசத்திலே, அத்தகைய மாய வீரன் இந்திரஜித்து!

இந்த நிலையில் இருக்கும் ராமனுக்கு உபமானமாக என்ன சொல்லலாம் என்று கவிஞன் ஆலோசிக்கவேண்டியது தானே. ஆலோசனை ஒரு கணம்; மறு கணம் ஓடி வந்து நிற்கிறது உபமானம்— பரத ரூபத்திலே!

பாட்டு முழுமையும் பார்த்துப் பரதனையும் பார்த்து விடுவோம்:

வரதன், போய் மறுகா
நின்ற மனத்தி
னன்,
'மாயத் தோனைச்
சரதம்போர்
வென்று
மீளும்; தருமமே!
தாங்கு'கென்
பான்,



விரதம் பூண்டு(டு) உயிரி–
னேடும் தன்னுடை
மீட்சி நோக்கும்

பரதன்போன்(று) இருந்தான்,
நம்பி வருகின்ற
பரிசைப் பார்த்தான்.


[வரதன் - (இங்கே) ராமன். மறுகா நின்ற–கலங்கிக் கொண்டிருந்த. சரதம்– நிச்சயமாக. தருமமே தாங்குக – தருமமே! நீயே தாங்கவேணும். என்பான்– என்று தனக்குள் தானே சொல்லிக் கொண்டிருப்பவன், தன்னுடை மீட்சி– தான் மீண்டும் வருவதை. நோக்கும் – எதிர்பார்த்த வண்ணமா யிருக்கும்.]

'நிச்சயமாகப் போரில் வென்று மீளுவான்' என்று ராமன் சொல்லும் அந்த நிச்சயத்திலேயே பதுங்கிக் கிடக்கிறது லட்சுமணனைக் குறித்த கவலை. கலங்கிக் கொண்டிருக்கும் உள்ளத்தை நோக்கி, 'வெற்றி நிச்சயம்; ஏன் இப்படிக் கலங்குகிறாய்? தருமம் கை விடாது' என்று உறுதி கூறிக் கொண்டிருப்பதைப்பாருங்கள்!

இந்திரஜித்தின் மாய ஆற்றலுக்கு, பயங்கர வீரத்திற்கு ராமனையும் இப்படி ஒரு சாட்சியாக்கிக் காட்டுகிறான்.

பதினான்கு வருஷம் ராமனைப் பிரிந்து 'அவனுக்குஅநீதி இழைக்க நேர்ந்ததே! நான் பிறந்ததால் தானே இப்படி நேர்ந்தது!' என்ற மன நிலையில் உயிரையும் விட்டு விடாமல் துன்ப மயமாகி விட்ட அந்த உயிரைச் சுமந்து கொண்டு தவங் கிடக்கும் பரத–சித்திரம் ஒரே வரியில் தீட்டப் பெற்றிருக்கிறது — வாடாத அழகு பொலிய!

போர்க்களம் கடந்து மீண்டு வருகின்ற தம்பியைப் பார்க்கிறான், ஒவ்வொரு



பார்வையும் ஒரு பூவாக, ஒரு தாமரையாக விழுகிறதாம் லட்சுமணன் மீது. அத்தனை பார்வைகளும் ஒரு மாலையாகித் தாமரை மாலை சூட்டி வெற்றி வீரனை ராமன் வரவேற்பது போன்ற ஓர் உணர்ச்சியை வாசகருள்ளத்தில் தோற்றுவிக்கும்படி அமைந்திருக்கிறது பாட்டு.

இப்படி வெளியிட முடியாத உணர்ச்சிகளையும் வெளியிடப் பார்க்கும் கவிதையை நாமும் ஓதி உருகிச் சுவைத்து அனுபவிப்போம் ;

வன்புலம் கடந்து
மீளும் தம்பி மேல்
வைத்த மாலைத்

தன்புல நயனம்
என்னும் தாமரை
சொரியும் தாரை

அன்புகொல் ? அழுக-
ணீர்கொல் ? ஆனந்த
வாரி யேகொல் ?

என்புகள் உருகிச்
சோரும் கருணைகொல் ?
யார் அ(து) ஓர்வார் ?

[வன்புலம்—வலிய நிலம்; (இங்கே) போர்க்களம். மாலைத் தன்புல நயனம் என்னும் தாமரை—மாலை போல் ஒழுங்காகப் பார்வைகளைச் செலுத்திக் கொண்டிருக்கும் தன் பொறியாகிய கண் என்னும் தாமரை. தாரை—மழைத் தாரை போல் கண்ணிலிருந்து பொழியும் நீர். ஆனந்த வாரி — ஆனந்தப் பெருக்கு. என்பு — எலும்பு. ஓர்வார்— அறிந்து சொல்லுவார்.]

உட்கார்ந்த வண்ணம் அங்கதனைப் பாராட்டிய ராமன் எழுந்து லட்சுமணனுக்கு எதிரே வருகிறான். இப்போது இந்தத் திருவடிகளின் முன்னே அங்கதன் பாத காணிக்கையாக வைக்கிறான் இந்திரஜித்தின் தலையை.

தலையை நோக்கித் தம்பியின் தோளையும் நோக்குகிறான் ராமன்.

கோலையினை நோக்கும்;
ஒன்றும் உரைத்திலன்,
களிப்புக் கொண்டான்!

இப்படி இதயம் நிறைந்த களிப்பில் பேச்சு வருவதுதான் எப்படி? அங்கதனைக் கண்டு பொங்கிய வாக்குப் பிரவாகம் இப்போது வற்றி வறண்டு விடுகிறது.

அப்படியே தழுவிக் கொள்கிறான் தன் அடிகளில் விழுந்து வணங்கிய தம்பியை. கான மேகத்தைச் செவ்வானம் கலந்தது போலவும், கரிய குன்றில் காலை வெயில் பரந்தது போலவும் தோன்றுகிறதாம் இரு சகோதரரும் தழுவிக் கொள்ளும் காட்சி.

பிறகு ராமன் தம்பி தோளில் கட்டியிருந்த அம்பறுத் தூணியையும், தோளுடன் மார்பைச் சுற்றிக் கட்டியிருந்த கவசத்தையும் விரைவில் அவிழ்த்து விடுகிறான். அப்பால் ஒற்றடம் கொடுத்துப் புண்ணை ஆற்றுவது போல் மீண்டும் மீண்டும் தம்பியைத் தழுவிக் கொள்கிறானும்.

தம்பியைப் பாராட்டவில்லை; தம்பிக்குப் பணி செய்கிறான். ராமாயணத்தில் தம்பி பணி புரிவதைத் தானே இதுவரை நாம் பார்த்திருக்கிறோம்? எனவே, இந்தப் பணிக்குமேல் ஒரு பாராட்டும் உண்டோ ?

கடைசியாகத் தான் பேச்சு வருகிறது ராமனுக்கு. அந்த நாவன்மை கொண்டு, 'ஆடவர் திலக!' என்று தம்பியை அழைக்கிறான்.

'உன்னால் இந்த வெற்றி' என்று பாராட்ட வந்தவனைப் போல் 'ஆடவர் திலக! நின்னால்' என்கிறான்.

பாராட்டு விபீஷணத் தம்பிக்கே!

ஆனால் 'ஆடவர்திலக! நின்னால் அன்று' என்றுதான் சொல்லி முடிக்கிறான். ஏன்?

அதோ விபீஷணன் வந்து கொண்டிருக்கிறான், தாது கோஷ்டியின் கடைசி அணியாக.

சொந்தத் தம்பியைப் பாராட்டுவது போல் தொடங்கியது விபீஷணத் தம்பியின் பாராட்டாக முற்றுப்பெறுகின்றது:

'ஆடவர் திலக!
நின்னால் அன்(று); இகல்
அனுமன் என்னும்

சேடனால் அன்று;
வேறோர் தெய்வத்தின்
சிறப்பும் அன்று;

விடணன் தந்த
வென்றி ஈ(து)!' என
விளம்பி மெய்ம்மை

ஏடவிழ் அலங்கல்
மார்பன் இருந்தனன்
இனிதின் இப்பால்

[இகல்—வலிமை. சேடன்—சிரேஷ்டன். ஏடு அவிழ்—இதழ் விரிந்த]

இது ராஜ தந்திரப் பேச்சு அன்று, மெய்ம்மை தான் என்பது கவிக்கூற்று.

காவியத்துள் ஒரு வீர காவியம்

என்ன சோகம்! என்ன முடிவு!

பி.ஸ்ரீ

27

'இமயமலை இல்லை!' என்று சிலர் சொன்னால் நம்புவோமா? 'நேற்று இருந்தது; இன்று இல்லை!' என்று சொன்னால்தான் நம்புவோமா?'

* * *

உலகத்திலே ஒரு புறம் மகிழ்ச்சி கூத்தாட, ஒரு புறம் சோகம் தலைவிரி கோலமாய்ப் பேயாட்டமாடி அலறு வதைப் பார்க்கிறோம். ராமன் பாசறை யிலே வெற்றிப் பெருமிதமும் விசேஷ ஊக்கமும் காணப்படுகின்றன. ராவண லங்கையிலோ ஏக்கம், அரக்கியர் புலம்பல், அரக்கர் சோர்வு.

அங்கதனும் அனுமனும் லட்சுமண னும் விபீஷணனும் — தூது கோஷ்டியாக வந்தவர்கள்—அறிவிக்காமலே செய்தி அறியப்பட்டது:

இமயமலை இல்லையா?

தன் தூதர்கள் வந்து நிற்கும் நிலையி லிருந்தே ராவணனும் செய்தியை ஊகித் துக் கொண்டிருக்கலாம். அதற்கும் முன்பே, அழுகுரல்களே செய்தி தெரி வித்திருக்கலாமே!

ஆனால் இந்திரஜித்து மரணமடைந் திருப்பான் என்பதை ராவணன் கனவி லும் நம்பியிருக்க முடியாதே!

பல்லும் வாயும்,
மனமும், தம் பாதமும்
நல்உ யிர்ப்பொறை
யோடு நடுங்குவார்

[நல் உயிர்ப்பொறை - நல்ல உயிர்ச் சுமை] என்ற நிலையில் தூதுவர் வந்து நின்ற போதிலும், அவர்கள் சொல்லித் தானே ராவணன் தெரிந்து கொள்ளப் போகிறான்?

கோப வீச்சு
(இன்று இல்லையா?)

தூதர் தெரிவித்த செய்திதான் என்ன?

இல்லை ஆயினன்
உன்மகன் இன்று!

என்று சுருங்கச் சொல்லி விளங்க வைத்து விடுகிறார்கள்.

ராவணனுக்குப் பயம் இல்லை; கோபம்தான். கடுங் கோபம் வருகிறது, பெரும் பயம் செய்தி சொன்ன இந்தத் தூதர்களுக்குத்தான்; செய்தி கேட்ட சபைக்குத்தான்!

பயம் ஆட்டி வைக்க, 'செத்தோமோ, பிழைத்தோமோ?' என்ற நிலையில் செய்தியைக் கக்கிவிட்டு ஒரே ஓட்ட மாகப் போய் விடவேண்டும் என்பது தூதர்களின் திட்டம் என்று ஊகிக்க லாம்.

ஆனால் இவர்களுக்கும் முன்பே, செய்தி கேட்டார்களோ, இல்லையோ, ஓடி ஒளித்துக் கொள்கிறார்கள் ராவண சபையிலிருந்தவர்கள்—ஆடல் பாடல் களில் ஈடுபட்டிருந்த பெண்களும் கூட:

ஓடி எங்கணும்
சிந்தி ஒளித்தனர்.

[எங்கணும் — எங்கும், சிந்தி — சிதறி.]

ராவண கோபம் முதல் முதல் தூதுவ ரையே வெட்டி விழ்த்தப் பார்க்கிறது: என்ன நியாயம், பாருங்கள்!

சூர்ப்பணகை, அங்கபங்கம் அடைந்த பின் ராம லட்சுமணருக்கு ராவண பயம் உண்டாக்கி அவர்களை வசப்படுத்தப்

பார்த்தாள். அப்போது, 'தன் மூக்கை அவர்கள் அரிந்த செய்தியை ராவணன் கேள்விப்பட்டால் அந்தச் செய்தி சொன்ன நாக்கு அரியப்படும், பிறகு தான் ராவணன் மறு சோலி பார்ப்பான்' என்றாள். அப்பேர்ப்பட்ட கோபத்திற்குத் தன் 'காதலன்' இலக்காக வேண்டாம், இரையாக வேண்டாம் என்பது சூர்ப்பணகையின் கவலை.

தங்கை தமையனை நன்றாக அறிவாள்; ஒரு புத்தகத்தைப் படிப்பது போல் படித்து வைத்திருக்கிறாள்! இப்போது இந்தத் தூதர்களின் நாக்கை அரியவில்லை ராவணன்; பளிச் சென்று வாளை உறையிலிருந்து உருவித் தூதர்களின் கழுத்தை நோக்கி வீசுகிறான்.

'கடவுள் இல்லை' என்று சொல்லலாம்; 'இமயம் இல்லை' என்று நாஸ்திகம் பேசலாமா? அப்படிப் பேசுவோரை வைத்துப் பார்க்கலாமா?

'ஐயோ! பாவி வீசி விட்டானே! தூதர் என்ன தவறு செய்து விட்டார்' என்று வாசகர் கவலைப்பட வேண்டியதில்லை. தூதர்கள் கொல்லப்படவே யில்லை! வடுப்படாமலே அப்பால் போய்விடுகிறார்கள்! இது ஒரு கம்ப சூத்திரம்.

'எப்படி' என்று அதிசயிக்கிறீர்களா? இது என்ன கண்கட்டு வித்தையோ? அப்படி ஒன்றும் இல்லை. ஒரு பெரிய உளநூல் — உண்மையைத்தான் ஒரு சொற்கட்டு வித்தையாகக் காண்கிறோம்.

தூதர்கள் வெட்டி விழ்த்தப்படவில்லை; ராவணன் தான் விழுந்து விடுகிறான், கை சோர, மெய் சோர!

மிடற்று வீசலுறு
விழுந் தானரோ,
கடற் பெருந்திரை
போல்கரம் சோரவே!

[மிடற்று வீசலுறு—கழுத்தினிடத்தில் வீசத் தொடங்கி. கடற்பெருந்திரை போல்—கடலின் பெரிய அலைகள் போல். கரம் சோர—கைகள் சோர்ந்து போக.]

ராவணன் அளிக்க முயன்ற கோப சம்மானம் தூதர்களுக்குக் கிடைக்கவில்லை என்று முடிப்பதுதான் புத்திர சோகத்திற்குப் பொருத்தமான கம்ப சித்திரமாகும்.

கோப வீச்சுடன், ஓங்கிய கைகளுடன் ஆளையே விழ்த்தி விடுகிறது சோகம்.

ராவண சோகம்

சினத்தீயில் வெதும்பிக் கொண்டிருப்பவனை அந்த ராவணாகாரமான ஆகிருதியுடன் காட்டுகிறது கம்பன் வாக்கு!

விடம்பி றந்த
கடலென வெம்பினான்!

உருக்கி ஓடவிட்ட செம்புபோல் ஓடுகிறது கண்ணீர் இருபது கண்களிலிருந்தும். பற்களைக் கடித்துக் கொண்டு கைகளால் தரையைமோதுகிறான்; புலம்புகிறான்!




'மைந்த ! ஓ!' எனும்
'மாமகனே!' எனும்
'எந்தை! ஓ!' எனும்
'என் உயிரே!' எனும்.

[மாமகனே — சிறந்த மகனே.
எந்தை — என் அப்பனே.]

இந்திரஜித்தைக் குறித்த பயத்தினால் சிவபெருமான் ஒரு மலையில் போய் ஒளிந்து கொண்டானாம். விஷ்ணுவோ பெரும் பயத்தினால் கடலிலேயே முங்கி முழுகி மறைந்திருக்கிறானாம். 'இனி அவர்கள் உல்லாச பவனி வருவார்களே கருடன் மீதும் காளைமாட்டின் மீதும்!' என்று வயிறு எரிகிறது ராவணனுக்கு.

பத்துத் தலைகளும் பத்து விதமாகப் புலம்புகின்றனவாம். 'ஐயனே!' என்று இறந்தவனை அழைக்கிறது ஒரு தலை. 'நான் இன்னம் அரசு செய்வேனே!' என்று அழுகிறது ஒரு



சிரம். 'உன்னைக் காட்டிக் கொடுத்தேனே !' என்று புலம்புகிறது ஒரு தலை.

நான்காவது தலை, 'பிள்ளாய் ! என்னைத் தழுவிக் கொள்ளாமல் இருக்கிறாயே!' என்று கதறுகிறது. ஐந்தாவது தலையோ 'மான் புலியை உயிருண்டதே !' என்று அலறுகிறது.

'நீ மீண்டும் உன் குரலைக் காட்டமாட்டாயா ?' என்கிறது ஒரு தலை. 'இது என்ன வஞ்சமோ ? இனித் திரும்பி வர மாட்டாயோ ?' என்று கேட்கிறது ஒரு தலை;

'அன்று இந்திரனுடைய வெற்றி—மாலையைப் பறித்துக் கொண்டாயே !' என்று புலம்புகிறது எட்டாவது தலை.

'உன்னுடைய வில் நாணின் ஒசை கேட்டு எதிரிகளின் மனைவியர் தங்கள் தாலிகளைத் தொட்டுப் பார்ப்பார்களே !' என்கிறது ஒன்பதாவது தலை. 'நீ என்னையும் ஒளிந்து எந்த உலகம் போய்ச் சேர்ந்தாயோ ?' என்று ஏங்குகிறது பத்தாவது தலை.

இப்படி யெல்லாம் புலம்பிய பின் ராவணன் எழுந்து போர்க்களத்திலே தன் மகனுடைய உடம்பைத் தேடப் போகிறான். தேவர்களும் அழுது கொண்டே தொடர்ந்து போகிறார்கள்.

'இவனுடைய கோபத்தால் என்ன விளையுமோ ?' என்ற பயம் தான் இவர்கள் அழுகைக்குக் காரணம். கழுகுகளும் பேய்களும் பிணம் தின்னும் ஆசையால் கூட்டங் கூட்டமாக வந்திருக்கின்றனவாம் போர்க்களத்திற்கு. இவையும் அழுகின்றனவாம், ராவணனுடைய துக்கத்தில் பங்கு கொள்வது போல. சில பேய்களும் கழுகுகளும் ராவணனிடம் அன்பு கொண்டனபோல் அடி தொழுகின்றனவாம். சில சோர்ந்திருக்கின்றனவாம் துக்கத்தைத் தாங்க முடியாமல் தவிப்பதுபோல.

புத்திசாலித் தனமான சில பேய்களும் கழுகுகளும் யானைப் பிணங்களுக்கிடையே புகுந்து ஒளிந்து கொள்கின்றனவாம். ராவணனுக்கோ இவை குறித்த கவலை இல்லை.

குதிரைப் பிணங்களுக்கிடையே தேடுகிறான்; ராட்சஸப் பிணங்களுக்கிடையே தேடுகிறான். யானைப் பிணங்களை உருட்டிப் பார்க்கிறான்; தேர்களைப் புரட்டிப் பார்க்கிறான். தேடித்தேடிக் கடைசியாக,

கைகி டந்தது
　　கண்டனன் கண்களால்.

இந்திரஜித்தின் கையைத் தூக்கித் தன் தலைமேல் வைத்துக் கொள்கிறான்.

கைகண் டான்;பின்
　　கருங்கடல் கண்டென,

மெய்கண் டான்தன்
　　மேல்விழுந் தானரோ

[கைகண்டான் — கையைக் கண்டவனாகிய ராவணன். கண்டென — கண்டாற் போல. மெய் கண்டான் — உடம்பையும் கண்டான்.]

கை கண்டான்; உடல் கண்டான், ஆனால் தலையைக் கண்டானில்லை. விம்மிய நெஞ்சுடன் பயங்கரமான அந்த உண்மையைக் கண்டு பிடிக்கிறான்:

'தலையை வெற்றிச் சின்னமாகக் கொண்டு போய் விட்டார்கள் மனிதர்கள் !' என்று கண்டு பிடிக்கிறான். அந்த உடம்பையும் நரி உண்ணப் போகிற சமயத்தில் கண்டு பிடிக்க நேர்ந்ததாம்:

நரிஉணக் கண்டேன்
　　　ஊனின், நாய்உணும்
　　　உணவு நன்றால் !

[கண்டேன் ஊனின் — கண்டவனாகிய நான் உண்ணும் உணவைக் காட்டிலும்.]

காவியத்துள் ஒரு வீரகாவியம்

அனு ஒன்று ஒடி உதைத்தது

பி. ஸ்ரீ

28

'போர்க் கோலத்தில் என் புதல்வனோடு போனவர்களில் எவரும் மீளவில்லையே; ஆண்டிக் கோலத்திலுள்ள அந்த இரு மனிதர்களின் படை சிறிதும் சிதைந்ததுமில்லையே,—இது ராவணன் வீர வாழ்க்கை!' என்று தனக்குத்தானே சொல்லிக் கொள்கிறான் ராவணன்.

இதே சமயம் இந்திரஜித்தின் தலையுடன் அங்கதன் தவக்கோலத்திலுள்ள ராமன் முன் தோன்றுகிறான் என்று கருதலாம்.

அங்கும் இங்கும்

புதல்வனுடம்பைப் பார்த்து, 'அப்பா, உன் மனைவியர் என்னிடம் வந்து, ''எங்கள் கணவனைக் காட்டு!'' என்று அடித்து விழுந்து அழும்போது, 'நானும் உடன் கலந்து அழுதுகொண்டிருப்பேனா?' என்று கேட்கிறான்.

எனக்குநீ செய்யத்
 தக்க கடன்எலாம்
 ஏங்கி ஏங்கி
உனக்குநான் செய்வ
 தானேன்!

என்று பரிதவிக்கிறான், பெருமூச்சு விடுகிறான் அந்த முண்டத்தைப் பார்த்து. அங்கதனை 'வாநரேச'ப் பட்டம் சூட்டி, ராமன் தலை நிமிர்ந்து கௌரவிக்கும் சமயம் இது என்று கருதலாம்.

பிறகு ராவணன் இந்திரஜித்தின் உடலைச் சுமந்துகொண்டு, எதிரே வந்து விழுந்து விழுந்து கதறும் அரக்கியர்களுக்கிடையே முயன்று வழி பிடித்து நகரத்திற்குள் போகிறான். (அங்கே, லட்சுமணன், ராமன் முன் போய்ச் சேர்கிறான் எனலாம்.)

இந்தக் காட்சியைப் பார்க்க முடியாமல் சில அரக்கரும் அரக்கியரும் தங்கள் கண்களைத் தோண்டிக் கொள்கிறார்களாம்; கழுத்தை வெட்டிக் கொள்கிறார்களாம்! மார்பைப் பிளந்து கொள்கிறார்களாம். அவ்வளவு 'ராஜ பக்தி' ராவணன் மீதும், இந்திரஜித்தின் மீதும்!

சில பெண்கள் — அழகாய்ப் பாடக் கூடியவர்கள்—'இனி இந்த நாவைக் கொண்டு வேறு எவரையும் பாட வேண்டியதில்லை' என்று அந்த நாவைப் பறித்துக் கொள்கிறார்களாம்.

பண்கள்புக்(கு) அலம்பு
 நாவை உயிரொடு
 பறிக்கின் றாரும்

[பண்கள் புக்கு அலம்பு நாவை — ராகங்கள் புகுந்து ஒலிக்கின்ற நாக்கை.] என்று அந்தப் பெண்களைச் சுட்டிக் காட்டுகிறான் கவிஞன்.

பிறகு இந்திரஜித்தின் மனைவியர் வந்து ராவணனைச் சூழ்ந்துகொண்டு, தளிர் போன்ற கைகளைத் தலையில் வைத்த வண்ணம் சித்திரங்கள் தரையில் விழுந்து விழுந்து புரள்வதுபோல் புரளுகிறார்கள். ராவணனோ இரத்தம் கக்கும் கண்களுடன் அவர்களை விரைவில் தாண்டி அரண்மனைக்குள்ளே போய்ச் சேர்கிறான்.

சேர்ந்ததும், மண்டோதரி தன் கருங்கூந்தல் காலைத் தொட, கைகளால் மார்பில் புடைத்துக்கொண்டு வருவதைக் காண்கிறான். தாயின் சோகம் இங்கே எப்படி வருணிக்கப்படுகிறது பாருங்கள்!

ராவணன் இந்திரஜித்தின் உடலைக் கீழே வைக்கிறான். வந்த மண்டோதரி

அந்த உடல் மேல் நிலை குலைந்து விழுகிறாள் !

தலையின்மேல் சுமந்த
கையள், தழலின்மேல்
மிதிக்கின் றாள்போல்
நிலையின்மேல் மிதிக்கும்
தாளள், நேசத்தால்
நிறைந்த நெஞ்சள்,
கொலையின்மேல் குறித்த
வேடன் கூர்ங்கணை
உயிரைக் கொள்ள
மலையின்மேல் மயில்விழ்ந்
தென்ன, மைந்தன்மேல்
மறுகி விழ்ந்தாள்.

[நிலையின் மேல் — நிலத்தின் மேல்: தாளள் — காலையுடையவள். குறித்த — குறி வைத்த. கூர்ங்கணை—கூரிய அம்பு. மறுகி — மனம் சுழன்று.]

அழகழகாய்ப் பொருள்கள் வைத்திருக்கும் அரண்மனை. அருமையான வேலைப்பாடுகள், சிற்ப சித்திர விசித்திரங்கள். இவற்றுக் கிடையே இந்திரஜித்தின் தலையற்ற முண்டம்கிடக்கிறது. தாய் மனம் பொறுக்குமா ?

எப்படியோ நடந்து வருகிறாள் மண்டோதரி பிணத்தை நோக்கி. நிலத்தின் மேல் நடக்கிறாளா ? நெருப்பின்மேல் மிதித்துக் கொண்டு வருகிறாளா ? நேசத்தால்

நிறைந்த
நெஞ்சள்

என்கிறான் கவி.

அகத்தும் புறத்தும் புகுந்து பார்க்கும்—ஊடுருவிப் பார்க்கும்—ஆற்றல் உள்ளவன் கவிஞன். புகைபுகா வாயிலும் புகுந்து பார்க்கும் அனுமன் போலப் பார்த்து விடுகிறான் உள்ளும் புறமுமாக. எனவே, இவள் மிதித்து வரும் நிலத்து நெருப்பு நெஞ்சிலுள்ள நேச நெருப்பேதான் !— என்கிறான்.

குலைந்து கால் தொடத் தொங்கிய கூந்தலுடன் எப்படி நிலைகுலைந்து விழுந்து கிடக்கிறாள், அந்த அரண்மனை அழகுகளுக்கிடையே !

கவிஞனுக்குத் தான் பார்த்த ஒரு காட்சி, — தன் பொன்னான நெஞ்சைப் புண்ணாக்கிய காட்சி ஒன்று—நினைவிற்கு வருகிறது. இயற்கை அழகுகளுக்கிடையே ஒரு மயில் விரித்த தோகையுடன் விழுந்து கிடந்த காட்சிதான் அது !

மலை முகடுகளில் மேகம் படிகிறது. அந்தக் குளிர்ந்த இனிய பகற் பொழுதில் மலையும் பள்ளத்தாக்கும் பசும் புல்லும் காட்டுப் பூக்களும் செடி கொடிகளும்





பிராணிகளும் எவ்வளவு அழகா யிருக்கின்றன! இந்தக் காட்சியின்பத்திற்கு மேலும் இன்பம் ஊட்டுவது போல் ஒரு மயில் தோகை விரித்துஆனந்தமாக ஆடிக் கொண்டிருக்கிறது, மலைச் சாரலில் சற்றுச் சமநிலமாக அமைந்திருக்கும் ஒரு வசதியான இடத்திலே.

மேட்டுப் பக்கமான ஒரு இடத்திலிருந்து வேடன் ஒருவன் இந்த மலைக் காட்சிகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறான். மயில் ஆடுவதையும் பார்த்து விடுகிறான். மகிழ்ச்சி துள்ளுகிறது. கொடிய இதயத்தில் பொங்கும் குதூகலமல்லவா?

சித்திரக் கலைஞன் எழுதி எழுதிப் பார்க்க ஆசை கொள்ளும் காட்சி. அழகுக் கலைஞர் அனைவரும் உள்ளத்திலே என்றும் அழியாதபடி எழுதி வைத்துக் கொள்ள ஆசைப்படும் வர்ணக் களஞ்சியமான அழகுக் கொள்ளை.

ஆனால் வேடனுருவில் பார்ப்பவன் கொலைஞன் தானே.

அம்பு ஒன்றைப் புட்டிலிலிருந்து உருவி எடுக்கிறான். கூர்மையான அம்பு—'கூர்ங்கணை' என்கிறான் கவிஞன்,—தன் கையிலேயே குத்திவிடுமோ என்று கருதியவனைப் போல.

திருப்பித் திருப்பிச் சொல்லிப் பாருங்கள்! இரண்டு மெய் யெழுத்துக்கள் ஒன்று சேர்ந்து ஒலித்து அந்தக் கூர்மையை எப்படிக் காட்டுகின்றன பாருங்கள்!

தவறி வேடன் கையில் குத்தியிருந்தால் எப்படித் துடிக்கும் அந்த உடம்பு! 'கூர்ங்கணை' இதை உணர்த்துவதுடன், குறி தவறாது செல்லும் வேகத்தையும் ஒருவாறு உணர்த்துகிறது.

குறி பார்த்து விடுகிறான் வேடன். ஆடிக் கொண்டிருந்த மயில், குப்புற விழுகிறது, தோகையும் தானுமாக. அப்படி விழுந்து கிடக்கிறாளாம் மண்டோதரி கூந்தலும் தானுமாக.

இதே சமயம் அதே மலையில் இளவெயில் படர்ந்தது போல், செவ்வானத்தோடு கருமேகம் கலந்ததுபோல், ராம லட்சுமணர் தழுவிக் கொள்கிறார்கள்!

மலையை உடைத்த அணுக்குண்டு!

விழுந்து கிடந்தவள் உணர்வற்றிருக்கிறாள். 'மூச்சும் அடங்கி விட்டதோ?' என்று தோன்றுகிறது. உடம்பு அசையவேயில்லை.

மெல்ல மெல்ல விம்மி வாய்விட்டுக் கதறுகிருள். கதறல் காப்பாற்றுகிறது இவளுயிரை.

தன் மகன் தேவேந்திரனை வென்று வாகை சூடக் கண்டவள். சந்திர கலை வளர்வது போல் நாளுக்கு நாள் வளர்ந்து வந்த இளம் பருவம் அது. 'என்ன தவம் பண்ணினேன்?' என்று தாயுள்ளம் பூரித்துப் போயிற்று அந்த நாளில்.

அந்தப் பிள்ளை வளர்ந்து வளர்ந்து வில்லைப் பிடித்தவர்களுக்கெல்லாம் வேந்தனுகிச் சக்கரவர்த்தியுமாகி விட்டான்; அந்தச் சிகரத்திலிருந்து உருண்டு இப்போது தலையில்லாத முண்டமாய்க் கிடக்கிருன்.

சிலையினுல் அரியை
வெல்லக் காண்பதோர்
தவம்முன் செய்தேன்;

தலையிலா ஆக்கை
காண எத்தவம்
செய்தேன், அந்தோ!

[சிலை—வில். அரி—(இங்கே) தேவேந்திரன். ஆக்கை—உடல்.]
என்று பிரலாபிக்கிருள்.

'ஐயனே! அழகனே! என் அமிர்தமே! இப்போது உன் முகம் காணப் பெற்றேனில்லையே' என்று புலம்புகிருள்.

சதங்கை கலீரெனத் தவழ்கின்ற பருவம். இந்தப் பிள்ளை இரண்டு சிங்கங்களைப் பிடரிரோமங்களைப்பற்றி இழுத்துக் கொண்டுவந்து விடடான்! ஆட்டுக்கடா இரண்டைக் கோப மூட்டித் தாக்க விடுவது போல் சண்டைக்கும் விட்டானும். 'அந்த விளையாட்டை இன்னும் காண்பேனு!' என்று பித்தேறியவள் போலக் கதறுகிருள்.

'என் ஆசை தீரும் படி அப்படி யெல்லாம் விளையாடிக் காட்ட எழுந்திருக்க மாட்டாயோ?' என்று புலம்புகிருள். விளையாட்டிலேயே அப்படி யெல்லாம் பிறரைப் பயமுறுத்திய பிள்ளை, போர்களையும் விளையாட்டாகச் செய்து மூன்று லோகங்களையும் பயமுறுத்தி விட்டானும்.

'அந்த என் புதல்வனு இப்படி மனிதரில் ஒருவன் கொல்ல மாண்டு கிடப்பவன்?' என்றுஅலறுகிறது வீரத்தாயின் இதயம்:

புக்கபோர் எல்லாம்
வென்று நின்றஎன்
புதல்வன் போலாம்,
மக்களில் ஒருவன்
கொல்ல மாள்பவன்?
வான மேரு
உக்கிட அணுஒன்(று)
ஓடி உதைத்தது
போலும் அம்மா!

[புக்க—புகுந்த. வான மேரு—வானளாவிய மேருமலை. உக்கிட— சிந்தி அழிந்து போகும்படி.]

'மனித அணு ஒன்று மாய்த்து விட்டதே மலையான இந்திரஜித்தை!' என்ற கோபம் கலந்த சோக வெறியில், இன்று அறியப்பட்டிருக்கும் அணுவின் பயங்கர நாச சக்தியைப் பற்றிய உண்மையைக் குறிப்பிடுகிருள் மண்டோதரி!

ஒரு பொன்மலை போல—வானளாவிய பொன்மலை போல—இன்றைய நாகரிகம் காணப்பட்ட போதிலும், இதை இருந்த இடம் தெரியாமல் தூள் தூளாகச் செய்துவிடும் ஆற்றல் அணுவுக்கு உண்டு என்பதை இந்த அணுக் குண்டு யுகத்தில் நாம் எவ்வளவு நன்ருக உணர்ந்து நடுங்கிக் கொண்டிருக்கிருேம்!

லட்சுமண பாணம் மாமேருவாக நின்ற இந்திரஜித்தை அழித்து, ராட்சஸ ஏகாதிபத்தியத்தையும் அழித்து விடும் என்று அலறுகிருள் மண்டோதரி. எனவே,

அஞ்சினேன், அஞ்சி—
னேன்அச் சீதைஎன்(று)
அமிழ்தால் செய்த
நஞ்சினுல் இலங்கை—
வேந்தன் நாளை இத்—
தகையன் அன்ருே?



[இத்தகையன்—இதே தன்மை யுடையவனுவான்; இந்திரஜித்தைப் போல் இறந்து கிடப்பான்.]

இவள் இப்படிப் புலம்பும்போது 'விபீஷணன் தந்த வெற்றி' குறித்து ராமன் பிரஸ்தாபிப்பதாய்க் கருதலாம்.



ராவணன் வீழ்ச்சி

மகோதரன்

அல்லது

நெஞ்சுத் துணிவு

பி. ஸ்ரீ

29

'அஞ்சினேன்; அஞ்சினேன்: சீதையால் நாளை லங்கேச்வரன் கதியும் இப்படித்தானே ஆகப் போகிறது?' என்ற மண்டோதரி புலம்பல் காதில் விழுந்ததும் ராவணன் பைத்தியம் பிடித்தவனைப் போல் பிதற்றிக் கொண்டே ஓட ஆரம்பிக்கிறான். 'என்ன கல் நெஞ்சு சீதைக்குத்தான்! அந்த நெஞ்சிலே தான் என்ன வஞ்சகம்! வெட்டித் தீர்த்து விடுவோம்' என்று சொல்லிக் கொண்டே ஓடுகிறான்.

அப்போது ஒருவன் வந்து குறுக்கிடுகிறான். எவ்வளவோ தைரியசாலி, புத்திசாலி! புத்தியைக் கொண்டு தைரியத்தை வளர்த்துக் கொண்டே யிருப்பவன்.

அச்சத்தைத் துச்சமாகத் தள்ளியிருக்கும் இவனும் அஞ்சிக் கொண்டுதான் வருகிறான்! ஆனால் இந்த அச்சம் தன் பொருட்டன்று; சீதை பொருட்டன்று; ராவணன் பொருட்டே!

மகோதர குணாதிசயம்

மகோதரன், ராவணனை நெருங்கி அடியில் விழ்ந்து, 'மன்னா! உன் புகழுக்குக் கேடு வந்து சேர்ந்து விட்டது' என்று கண்டிப்பாகச் சொல்லி விடுகிறான்.

இதுவரை ராவணன் செய்த செயல்கள் புகழைக் கெடுக்க வில்லையா? இல்லை என்பதுதான் இந்த மந்திரியின் அபிப்பிராயம். சீதையை வஞ்சித்துக் கவர்ந்து கொண்டது கூட ராவணன் புகழுக்குக் கேடு விளைத்ததாக நினைக்கவில்லை மகோதரன்.

வஞ்சமும் புத்திசாலித்தனத்தின் பகுதி தான்இந்த அமைச்சனுக்கு. தன் தாயை வஞ்சிப்பதும் அறிவுக்கு அழகு தான் என்று கருதுகிறவன் இவன்; சீதையை வஞ்சித்த செயலை ராவண மேதைக்கும் ராவணன் புகழுக்கும் பொருத்தமானது என்றே கருதிவிட்டான்.

மாயாஜனக நாடகத்துக்கு மூலகாரணம் மகோதரன் தானே? அதன் நோக்கம் சன்மார்க்கப் படுகொலை தான். எனினும் சீதையைக் கொலை செய்வது தவறு என்று தடுத்தான் அப்போதும்! இப்போதோ பழியின் உச்சநிலை என்று அஞ்சுகிறான்.

பழியும் புகழும்

இந்தப் பெரும்பழி குறித்தும், ராவணனுக்குரிய புகழ் குறித்தும் மகோதரன் வார்த்தை இது:

நீர்உள தனையும்,
சூழ்ந்த நெருப்(பு)—உள—
தனையும், நீண்ட

பார்உள தனையும்,
வானப் பரப்(பு)உள—
தனையும், காலின்

பேர்உள தனையும்
பேராப் பெரும்பழி
பிடித்தி போலாம்,

போர்உள தனையும்
வென்று புகழ்உள—
தனையும் உள்ளாய்!

[உளதனையும்—உள்ள காலம் வரையிலும். பார்—பூமி. காலின்—காற்றின். பேராப் பெரும்பழி—அழியாத பெரும் பழி. பிடித்தி போலாம்—பிடித்துக் கொள்வாய் போலும்.]

போர் உள்ளவரையும் வெற்றி ராவண ணுக்குத் தானும். புகழ் என்ற ஒன்று இருக்கும் வரையும் ராவணன் பெயரும் மறையாமல் இருந்து கொண்டேயிருக் குமாம். சீதையைக் கொல்வதால் இந் தப் புகழுக்குக் கேடு வருவது திண்ணம் என்கிறுன் மகோதரன்.

ஆனல் காமவெறி கொண்டு சீதையை வஞ்சித்துக் கவர்ந்து வசப்படுத்தப் பார்ப்பது ராவண னது புகழுக்கு ஒரு கேடும் செய்யவில் லையாம். இந்த மன நிலை கூர்ந்து நோக்கத் தக்கது.

வாளின் துதி

பழியின் சிகரத்திலே தொத்தி ஏறப் பார்க்கும் ராவணனுடன் கற்பனைச் சிக ரத்திலிருந்து வாதாடிப் பார்க்கிறுன் மகோதரன். 'உன் கையிலுள்ள இந்த வாளின் புகழ்தான் என்ன? ஞாபகம் இல்லையா?' என்று கேட்கிறுன்.



மகா பலசாலிகளும், தேவேந்திரனைப் பலமுறை வெற்றி கொண்டவர்களுமான காலகேயா என்ற அசுரர்களைத் திக்கு யானைகளின் தந்தங்களோடு வெட்டித் தள்ளிய வீரவாளல்லவா? இதை 'விசயத்து ஒள்வாள்' (ஒளி வீசும் விஜயவாள்) என்கிறான்.

'இந்த வாள் வீரரை வெட்டும்; மாதரை வெட்டுமா?' என்கிறான்.

வள்ளிய மருங்குல் —
செவ்வாய் மாதர்மேல்
வைத்த போது,
கொள்ளுமே ஆவி,
தானே நாணத்தால்
குறைவ தல்லால்?



[வள்ளிய மருங்குல் — வள்ளிக்கொடியை ஒத்த அழகிய இடையையும். செவ்வாய் மாதர் — சிவந்த வாயையும் உடைய மாதர். கொள்ளுமே ஆவி — உயிரைக் கொள்ளுமோ.]

'நீ வாளை நீட்டினாலும் இது நாணத்தால் குறுகிப் போகுமே!' என்று தன் கையிலிருக்கும் வாளைப் பாடும் மகோதரனை நோக்கி ராவணன் பிரமித்து மந்திரத்தால் கட்டுண்டவன் போல் நிற்கிறான் எனக் கருதலாம்.

'மாயாசனக'ப் படலத்திலே சீதை ராவணனை நோக்கி, ''உன் மகனுயிரை லட்சுமண பாணம் பருக, நாய் அவன் உடலைத் தீண்டப் போகிறது!'' என்று கோபத்தால் சாபம் கொடுப்பதுபோலப் பேசினாள். இப்போதோ அந்த வாக்கே பெரும்பாலும் பலித்து விட்டது போல் இந்திரஜித்து கொல்லப் பட்டு அந்த உடலை நரி உண்ணப் பார்த்த பின், தன் பட்டமகிஷி சீதையின் நாச சக்தி குறித்து அலறியதாலும் தூண்டப் பட்டிருக்கிறான். இப்போது துணிச்சலுடன் சீதையைக் காப்பாற்றிய மகோதரனும் அஞ்சி ஒதுங்க வேண்டிய சந்தர்ப்பம் தான் இது! அந்த வாள் அப்படியே மகோதரன் தொந்தியைக் கிழித்திருக்கக் கூடுமே!

கைகொட்டிச் சிரிப்பரே!

தருணம் தப்பினால் மரணம் தான், ஆனால் மகோதரனா இந்தத் தருணத்தைத் தப்ப விடுகிறவன்? கற்பனைச் சிகரத்தை விட்டுப் பரிகாசச் சிகரத்தில் ஏறிப் பேசுகிறான்!

'மங்கையர் குலத்து—
ளாளைத் தவத்தியை
மூனிந்து வாளால்

சங்கை ஒன்(று) இன்றிக்
கொன்றான்! குலத்
துக்கே
தக்கான்!' என்று

கங்கையஞ் சென்னி—
யானும் கண்ணனும்
கமலத் தோனும்

செங்கையும் கொட்டி
உன்னைச் சிரிப்பரால்
'சிறியன்' என்னு!

[முனிந்து — கோபித்து. சங்கை — எண்ணம்: மரியாதை. கங்கையஞ் சென்னியானும் — கங்கையைத் தலையில் வைத்துக்கொண்டிருக்கும் சிவபிரானும், கண்ணனும் — (இங்கே) விஷ்ணுவும். கமலத்தோனும் — பிரம்மாவும். செங்கை — செவ்விய கைகள்.]

ஏன்? தரும சத்துருவான ராவணனுக்கும் ஒரு தருமம் இருக்கவேண்டுமாம். அந்தத் தருமம் அல்லது இயல்பையும் சிரிக்கப் போகிறது இந்தச் செயல் என்கிறன் :

நிலத்தியல் பன்று,
வானின் நெறி
யன்று; நீதியன்று;

தவத்தியல் பன்று;
மேலோர் தருமமேல்,
அதுவும் அன்று

புலத்தியன் மரபின்
வந்து புண்ணிய
மரபு பூண்டாய்!

வலத்தியல் பன்று;
மாயாப் பழிகொடு
மறுகு வாயோ ?

[நிலத்து இயல்பு — பூலோகத்தார் இயல்பு. வானின் நெறி — வானுலகத்தாரின் முறை. தலத்து இயல்பு — இந்தத் தலத்தின் இயல்பு, மரபின் வந்து—வம்சத்திலே பிறந்து. புண்ணிய மரபு—உன் திறமையால் புனிதமானதொரு குலத்தையும். பூண்டாய் — பூணக் பூண்டு கொண்டவனே. வலத்து இயல்பு — பலத்திற்கு உரிய தருமம். கொடு — கொண்டு, மறுகுவாயோ — மனம் கலங்கப் பெறுவாயோ]

'நிலமும் வானமும் வகுத்துக் கொண்ட நீதியும் நெறியுமில்லையே நீ இப்போது உனக்காக வகுத்துக் கொள்வது' என்று சொன்னதுடன், 'இலங்கைத் தலத்தார் — மேலோரும் கீழோரும் — தமக்கென வகுத்துக் கொண்ட வழியிலும் நீ செல்லவில்லையே!' என்று இடித்துரைக்கிறன் மகோதரன்.

'வலிமையே உரிமை' என்று சொல்லுகிறர்களே, அந்த வலிமையும் இந்தக் கொலைக்கு உரிமை தரவில்லையாம். ஆனல் சீதையைக் கவர்ந்து காமவெறி கொள்ள மட்டும் உரிமை தந்திருக்கிறதாம். இது மகோதர தர்மம்.

ராவணனுக்குக் கிடைத்த பரம்பரை உரிமை புலஸ்தியர் என்ற ரிஷியின்குலம். தன்னுடைய சொந்த யோக்கியதையால் இந்தப் புலத்தியன் மரபைப் புண்ணிய மரபாக்கிக் கொண்டிருக்கிறனும் ராவணன்.

'மற்றவர்கள் நல்ல பரம்பரையில் பிறக்க வேண்டும், என் வம்சத்திற்கோ பரம்பரை என்னுடன் தொடங்கிப் பின் முன் செல்லவேண்டும்!' என்றனும் நெப்போலிய வீரன். முந்தையோர் சாமானியருக்கே பெருமை தருகிறர்கள்.

அசாதாரண வீரனே முன்னோர்க்கும் பெருமை தருகிறன் என்பது கருத்து. ராவணனுக்கோ இருவகைப் பெருமையும் உண்டு என்பது மகோதரன் அபிப்பிராயம். அவ்வளவு பெருமையும் சிரிப்பிற்கே இலக்காகும் சீதையைக் கொல்வதால் என்பது எச்சரிக்கை.

முடிவுரை
தேளின் கொடுக்கு

இவ்வளவு சொன்னபின், முடிவுரை வருகிறது. வீரவெறிக்கும் காமவெறிக்கும் சாந்தியான ஒரு வார்த்தை சொல்லிக் கொலைவெறியைத் தடுத்தேவிடுகிறன் மகோதரன்:

'இன்று நீ இவளை
வாளால் எறிந்து போய்,
இராமன் தன்னை

வென்று மீண்(டு) இலங்கை
மூதூர் எய்தினை
வெதும்பு வாயோ?

பொன்றினள் சீதை
என்றே போவர்கள்
அவர்தாம்; அல்லால்

வென்றிட முடியா(து)
என்னும் விரமோ?.
விளம்பல்' என்றன்.

[எய்தினை—அடைந்து. பொன்றினள்—இறந்து விட்டாள். விளம்பல்—சொல்லுவாயாக.]

இறுதிக் கேள்வி ராவணனைத் தேள் போலக் கொட்டி, வாளைக் கீழே போட்டு விடச் செய்கிறது.

இந்த முடிவுரை ஆவேசப் பேச்சின் முடிவிலே தொங்கும் ஓர் அலங்காரத் தொங்கல் அன்று; மகோதரத் தேளின் கொடுக்கு; துணிவும் வஞ்சனையும் அறிவுக் கூர்மையும் உருவாக்கிய கொடுக்கே தான்!

இந்திரஜித்து ராட்சஸ லங்கையின் ஜீவநாடி என்றால், இந்த ஏகாதிபத்தியத்தின் வேர், மூலபலப் படையென்று சொல்லலாம்.

முதல் நாள் யுத்தத்தில் தோல்வி கண்டதுமே ராவணன் முன் ஜாக்கிரதையாக மூலபலம் முழுதும் திரட்டி வரும்படி எட்டுத் திசைகளிலும் தூதர்களை ஏவி விட்டான். அவர்களும் 'வாயு வேகமா, மனோவேகமா?' என்று பிரமிக்கும்படி அவ்வளவு வேகமாய்ச் சென்று மூல பலப் படைகளை உலகின் மூலை முடுக்குகளையும் விடாது தேடித் திரட்டி வந்தார்கள்.

இதற்கிடையே கும்பகர்ணன் வதமானான்; மாயா ஜனக நாடகம் நடந்தது. அதிகாயன் வதமானான், இந்திரஜித்தும் போர்முனைக்கு வந்தான்; நாகபாசம் வீசினான். மகரக் கண்ணன் முதலானவர்கள் வதமாயினர். இந்திரஜித்து மறுபடியும் வந்து பிரமாஸ்திரம் வீசினான்; படாத பாடு படுத்தினான். ராவணன் களியாட்டம் ஆடினான். இந்திரஜித்து 'மாயா சீதை நாடகம்' நடத்தினான்; எதிரிகளை முடிக்க விரும்பி நிகும்பலை வேள்வி முடிக்க முயன்றான்; தானே முடிந்து போனான். இந்த நிலையில் ஆறாத ராவண சோகத்தை மூழ்கடிக்கிறது வந்து மோதும் மூலபலப் பெரு வெள்ளம்.

அன்று அனுப்பி வைத்த தூதர் இன்று திரும்பி வந்து செய்தி சொல்லுகிறார்கள், 'அங்கங்கே யிருந்து பத்தி பத்தியாகப் பெருஞ் சேனைகள் வந்துள்ளன: உன் ஊரில் இடமில்லை!' என்கிறார்கள். 'நமனூரில் இடம் பிடிக்கலாம்!' என்று நகைக்கிறது விதி. ராவணனோ சோகத்தை மறந்த மகிழ்ச்சியுடன் பார்க்கப் போகிறான்.

ஒரு திக்கிலிருந்து மற்றொரு திக்கின் மேல் மண்டிப்பாயும் சமுத்திரம் போன்ற மூலபலப் படையைக் கோபுரத்தில் ஏறி ராவணன் பார்க்க, தூதர்கள்,

வேதவே தாந்தம்
கூறும் பொருளினை
விரிக்கின் றார்போல்

சுட்டிக் காட்டி விளக்க முயல்கிறார்களாம்.



30

இன்னார் இன்னார் இன்னின்ன இடத்தவர் என்று காட்டுகிறார்கள், பல்வேறு தீவுகளிலிருந்து வந்தவர்களையும், மலைகளிலிருந்து வந்தவர்களையும் காட்டுகிறார்கள்.

'மாயையின் முதல்வர்' என்று ஒரு கூட்டத்திற்கு முதன்மை தருகிறார்கள். காட்டுத் தீயும் காற்றும் போலக்கோபாவேசம் கொண்டவர்கள் என்று ஒரு பெருங் கூட்டத்தைக் குறிப்பிடுகிறார்கள். அந்தகாரத்தோடும் ஆலகால விஷத்தோடும் பிறந்தோர் என்று ஒரு சேனைக் கடலைக் காட்டுகிறார்கள்.

வேதாளக் கையினர் என்று ஒரு கடல் அறிவிக்கப் படுகிறது. புற்றீசல் போலப் புறப்பட்ட ஒரு கூட்டத்தைப் 'பாதாளத்திலிருந்து இவர்கள் வருகிறார்கள், நாதா! உன் மீதுள்ள அன்பினால்' என்று அறிவிக்கிறார்கள்.

இரத்த பானம் செய்வோரென்றும், அது கிடைக்கா விட்டால் கடலைக் குடிப்பாரென்றும் ஒரு கூட்டத்தின் பயங்கர தாகம் வருணிக்கப்படுகிறது. காளியின் கோபத்தீயிலே கூளிப் பேய்

களின் உடன் பிறப்பாகத் தோன்றிய வர்களையும் அறிமுகப்படுத்துகிறார்கள்.

பழைய குல கோத்திரங்களும் பண்டைப் பழங்கால இனப் பெருமையும் பேசுவோரைப் பரிகசிப்பதுபோல்,

பாவம் தோன்றிய
காலமே தோன்றிய
பழையோர்

என்று ஒரு பெருங் கூட்டத்தின் தொன்மை மாட்சி தெரிவிக்கப்படுகிறது.

தாயையும் வஞ்சிக்கும் புத்திக் கூர்மையை மகோதரனிடம் கண்டோம். இவர்களோ கோபத்திலே தாயையும் உயிர் உண்ணும் கொடியவர்களாம்.

கடைசியாகத் தூதர்கள் 'இம் மூலப் படைவீரர்களில் ஒருவனே போதும், ஒருவனுடைய ஒருகையே போதும், குரங்குகளையும் அந்த மனிதர் இருவரையும் அடித்துப் பிடித்து வருவதற்கு!' என்று சொல்லுகிறார்கள்.

இத்தகைய மூலப் படைத் தலைவர்கள் வந்து ராவணனை அடிவிழுந்து வணங்குகிறார்கள். ராவணன் க்ஷேமம் விசாரித்ததும், 'உன்னைத் தலைவனாகப் பெற்ற எங்களுக்கும் உண்டோ குறை?' என்று சொல்லிக் கொண்டே முகத்தைப் பார்க்கிறார்கள்.

பக்கத்தில் உள்ளவர்களின் முகங்களையும் பார்க்கிறார்கள். 'ஏன் இந்தக் கலக்கம்?' என்று கேட்கிறார்கள்.

கும்பகர்ணனும் இந்திரஜித்தும் சிறு மனிதர்களாலும் குரங்குகளாலும் முடிந்து போனது கேட்டுச் சேனாபதிகளுக்குச் சிரிப்பு வருகிறது. மாலியவான் முன் வந்து அனுமன் ராமன் முதலானவர்களின் சக்தியை உள்ளபடி வெளியிடுகிறான். மூலபலத் தலைவர்களோ 'மானிடச் சிறிய உடல்களின் இரத்தத்தைக் குடித்து மீள்வோம்' என்று புறப்படுகிறார்கள்.

* * *

வள்ளுவர் முரசு அறைய, மூலப் படைக் கடல் படர்ந்து செல்லுகிறது எதிரிகளை நோக்கி, ஒளியை நோக்கி இருள் படர்வது போல. 'நெருப்புக்கும் நெருப்பு' என்று சொல்லும்படி அவ்வளவு கோபத்துடன் போகிறார்கள் அறத்தைத் தின்ற இப் பசியர்கள்; அருளைப் பருகிய இத் தாகத்தினர்.


எல்லாவற்றுக்கும் மேலாக, 'பாவத்தை மணம் புணர் மணாளர்' என்று இவர்களை இப்போது சுட்டிக் காட்டுகிறான் கவிஞன். பாவம் என்ற மங்கையின் பாக்கியமாக வாய்த்த மணவாளர்களாம் இவர்கள். நல்ல வேட்டை கிடைக்குமென்று யமனும் விதியும் தீவினையும் தொடர்ந்து போகிறார்களாம்.

கரி, பரி, தேர், காலாள் என்ற நால் வகைக் கால்களில் நடக்கிறது மூலபலம், 'அண்டம் வெடித்ததோ!' என்று பிரமிக்கத்தக்க பேரொலியுடன்.

இந்தச் சேனாசமுத்திரத்தைக் கண்டு வானவர்கள் நடுங்க,வானரர்கள் அஞ்சி ஓடுகிறார்கள். சுக்கிரீவன் அனுமன் அங்கதன் ஆகிய இவர்கள் மட்டுமே ராம லட்சுமணருடன் நிற்கிறார்கள். விபீஷணன் ராமனுடன் பேசிக் கொண்டிருக்கிறான்.

அஞ்சி ஓடிய வானரக் கடலை அழைத்து வரப் போகிறான் அங்கதன். அந்த வானரர்களோ,





மனிதர் ஆளின் என்,
இராக்கதன் ஆளின்என்,
வையம்?

[என்—என்ன, வையம் — உலகம்.]

— அதாவது, ராமன் ஆண்டால் என்ன? ராவணன் ஆண்டால் என்ன?—என்று வேதாந்தம் பேசுகிறார்கள். கடைசியாக ஜாம்பவான் சொற்படி வானர வீரர்கள் திரும்புகிறார்கள்.

'இந்த வானர சேனையை நீ அனுமன் முதலியவரோடு இருந்து பாதுகாப்பாய்' என்று லட்சுமணனை நோக்கி ராமன் சொல்லுகிறான். 'நான் ஒருவனே அவர்களையெல்லாம் எதிர் கொள்வேன்' என்று சொல்லி விட்டு, விபீஷணனையும் லட்சுமணனுக்குத் துணையாக நிறுத்தி விடுகிறான்.

ராமன் தனியனாகத் தங்களைக் கண்டு சிறிதும் அஞ்சாமல் எதிர் வருவது கண்டு மூல பல ராட்சஸர்கள் ஆச்சரியப்படுகிறார்கள். ராமன் வில் நாண் ஒலியை எழுப்பி அம்புகளை ஏவுகிறான். அரக்கர்கள் படைக்கலங்களும் சுடுகணைகளும் ஏவிக் கடும் போர் புரிகிறார்கள்.

பாணம் தொடுக்கும் போதெல்லாம் அசைந்து விஜய கோதண்ட மணிகள் 'கணகண' வென்று ஒலிக்க, ஒலிக்க, அந்தப் படுகளம் படும் பாட்டைக் கம்பன் தான் பாடவேண்டும் :

படுமத கரிபரி
சிந்தின; பனிவரை
இரதம்அ விந்தன;
விடுநிசை செவிடுபி-
ளந்தன; விரிகடல்
அளறெழுந் தன;
அடுபுலி அவுணர்தம்
மங்கையர் அளர்விழி
அருவிபொ ழிந்தன-
கடுமணி நெடியஎ-
னும்சிலை கணகண
கணகணெ னுந்தொறும்.

[பனிவரை—பனிமலை. அளறெழுந்தன—அளறு அது எழுந்தன; சேறுபட்டெழுந்தன. அடுபுலிஅவுணர்—கொல்லுகின்ற புலிபோன்ற அரக்கர்கள். கடுமணி — கொடிய ஓசையுடைய மணி. நெடிய எனும் சிலை — நெடிய வில்.]

கோதண்டத்தின் மணிகள் ஒலிக்குந்தோறும் அரக்கர் மங்கையரின் விழிகள் அருவி பொழிகின்றனவாம். ஒவ்வொரு ஓசையிலும் கணவனோ, சகோதரனோ, வேறு உறவினரோ செத்து விழுவது அப்படி உறுதிப் படுகிறது !

மூலபல முழுச் சண்டைக்கும் ஒரு படம்: பாட்டின் ஓசைப் பொலிவே களத்திற்கு நம்மைக் கொண்டு போய் விடுகிறது.

உலக முடிவு என்ற மஹா ஸ்மசானத்திலே தன்னந்தனியனாக நிற்கும் நீலகண்டமூர்த்தி போல் நிற்கிறான் ராமன். ஆ, என்ன பயங்கர காட்சி !

'தேவர்கள் பூச் சொரிந்தார்கள்' என்று தானே கதையை முடிக்க வேண்டும். ஆனால் 'தேவர்கள் பூச் சொரியவில்லை !' என்றே இந்த மூலபலக் கதை முடிகிறது:

தீமொய்த்த அனைய
செங்கண் அரக்கரை
முழுதும் சிந்தி,
பூமொய்த்த கரத்த-
ராகி விண்ணவர்
போற்ற, நின்றான்,
பேய்மொய்த்து நரிகள்
ஈண்டிப் பெரும்பிணம்
பிறங்கித் தோன்றும்
ஈமத்துள் தமியன்
நின்ற கறைமிடற்(று)
இறைவன் ஒத்தான்.

[தீ மொய்த்த அனைய — தீ மொய்த்தாற் போன்ற. ஈண்டி — நெருங்கி. பிறங்கி — விளங்கி. ஈமத்துள் — மயானத்துள். தமியன் நின்ற — தன்னந்தனியனாய் நின்ற. கறைமிடற்று இறைவன் — நீலகண்ட மூர்த்தி.]

பூச்சொரிய வந்த தேவர்கள் அதை மறந்து பூ மொய்த்த கையினராகவே நின்று விடுகிறார்களாம். மூலபலம் வதமானதால் ஏற்படும் ஆனந்த அதிசயம் இது !

துயர் தீர்ந்தது — ஆம், விண்ணும் மண்ணும் ஒருங்கே அனுபவித்த துயரம். ஏன், பாவமங்கையின் மணாளருக்கும் துயரம் துடைத்து விட்டதாம் ராமன் கருணை:

தாய்படைத் துடைய
செல்வம் ஈகெனத்
தம்பிக்(கு) ஈந்து,
வேய்படைத் துடைய
கானம் விண்ணவர்
தவத்தின் மேவித்,
தோய்படைத் தொழிலால்
யார்க்கும் துயர்துடைத்
தானை நோக்கி
வாய்படைத் துடையார்
எல்லாம் வாழ்த்தினார்,
வணக்கம் செய்தார்.

[வேய் படைத்துடைய கானம் — மூங்கில் நிறைந்த காடு. தவத்தின் மேவி — தவத்தினால் பொருந்தி. தோய் படை — இரத்தம் தோய்ந்த கொலைக் கருவிகள்.]

தீவினையில் விளைந்து வளர்ந்தவர்களுக்கு வாழ்க்கையில் தான் என்ன சுகம்? இவர்களுக்கும் துயர் துடைக்க அதிகார முத்திரை தரித்து வந்தவன் தான் கம்பனின் இந்த அவதாரமூர்த்தி !